பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 09 வெள்ளிக்கிழமை (24.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 28

## மனிதச் சங்கிலிப் போர் இன்று கொடிகாமத்தில்!

யாழ்ப்பாணம், டிசெ.24

அரசு மேற்கொண்டுவரும் யுத்த ஆயத்தங்களைக் கைவிட்டுச் சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்தவேண்டும் எனக் கோரி தென்மராட்சியில் நடைபெற்றுவரும் மனிதச்சங்கிலிப் போராட்டத்தின் தொடர்ச்சியாக இன்று கொடிகாமத்தில் பெரும்போராட்டம் ஒன்று இடம்பெறவிருக்கின்றது.

தென்மராட்சிப் பொது அமைப்புகளின் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றது.

"இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை விடுதலைப் புலிகளிடம் வழங்கவேண்டும்", "எமது நிலம் எமக்குவேண்டும்", "எங்கள் தலைவன் பிரபாகரனே" போன்ற உரிமைக் கோஷங்கள் முழங்க இன்று காலை கொடிகாமம் நகரப் பகுதியில் வீதியின் இரு மருங்கிலும் கைகோர்த்து நின்று மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் இதில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் இருவர் முகமாலையில் கைது!

கொழும்பு, டிசெ.24

துப்பாக்கிக் குண்டுகளுடன் முகமாலை சோதனைச் சாவடியூடாக யாழ்ப்பாணத்துக்குள் நுழைய முயன்ற விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவரைத் தாம் கைதுசெய்துள்ளனர் என்று படையினர் தெரிவித்துள்ளனர். நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வை.புலிவீரன், புவனன் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் சய

(18 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தை நோக்கி நாட்டை நகர்த்துகின்றார் ஜனாதிபதி!

## ஐக்கிய தேசியக்கட்சி எச்சரிக்கை

கொழும்பு, டிசெம்பர் 24

**ஜே.வி.பியின் உத்தரவின்றி சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதியால் ஓர் அடியேனும் எடுத்துவைக்க முடியாது. மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியாது. எனவே, யுத்தத்தை நோக்கியே அவர் காய் நகர்த்துகிறார்.**

**- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை செய்திருக்கின்றது.**

நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த முன்னாள் அமைச்சரும், எம்.பியுமான ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் இதுபற்றித் தொடர்ந்து மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் ஜனாதிபதியின் நடவடிக்கைகளால் அதிருப்தி அடைந்துள்ளனர். அவர்கள் இந்த அரசின்மேல் நம்பிக்கை இழந்துவிட்டனர். தமிழ்ப்பிரதேசங்களுக்கு வெளியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப்பொருள்களில் தங்கியிருக்க வேண்டாம் எனத் தமிழ் மக்க

(18 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய ஆளுநர் அடுத்த வாரம் யாழ். வருவார்?

யாழ்ப்பாணம், டிசெ.24

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராகப் பதவியேற்றிருக்கும் டிரோன் பெர்னாண்டோ அடுத்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய இருக்கிறார் என்று மாகாணசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஆளுநர் இங்கு

(18 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு அழுத்தம் கொடுக்க கிளிநொச்சியிலும் பேரணிகள்!

### அடுத்த வாரம் நடத்த ஏற்பாடு!

கிளிநொச்சி, டிசெ.24

தற்போது தேக்க நிலையை அடைந்துள்ள சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்குமாறு அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் மக்கள் போராட்டங்கள், பேரணிகள் என்பவற்றை கிளிநொச்சியிலும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிமாவட்டத்திற்குட்பட்ட தேசியஎழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று பகல் 11 மணியளவில் கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் நடைபெற்றது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

## இடுப்புப்பட்டி விவகாரத்தினால் பெண்போராளிகள் பயணம் தடை!

### கண்காணிப்புக்குழுவின் கருத்தை படையினர் அவமதிப்பு

மட்டக்களப்பிலிருந்து வன்னிக்குப் புறப்பட்ட 50 பெண்போராளிகளின் இடுப்புப்பட்டிகளை கழற்றவேண்டும் என்று இராணுவத்தினர் வலியுறுத்தியதை அடுத்து அவர்களின் பயணம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் பெண்போராளிகள் அணி, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடன் வன்னிக்குப் புறப்பட்டபோது போராளிகள் தமது இடுப்புப்பட்டியை அகற்றினால் மாத்திரமே தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படுவர் என்று இராணுவத்தினர் கூறினர். இதனால்,

(18 ஆம் பக்கம் பார்க்க)

## 'யுனிசெவ்' அமைப்பின் பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனுடன் நேற்று சந்திப்பு

### வன்னிச் சிறுவர்களின் நிலைகுறித்து ஆராய்ந்தனர்

கிளிநொச்சி, டிசெ.24

'யுனிசெவ்' அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டெட்சைபன் தலைமையிலான குழுவினர் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடியிருக்கின்றனர்.

கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுக்காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

வன்னியில் சிறுவர்கள் போஷாக்குக் குறைபாட்டால் பெரும் அபாயத்தை எதிர்நோக்கியிருக்கின்றனர் என்று ஐ.நாவின் உலக உணவு ஸ்தாபனம் விடுத்திருக்கின்ற எச்சரிக்கை தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வன்னியில் உள்ள சிறுவர்களின் கல்வி நிலை, பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை என்பன குறித்தும் 'யுனிசெவ்' பிரதிநிதிகள் தமிழ்ச்செல்வனிடம் கேட்டறிந்து

(18 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் காலமானார்!

புதுடில்லி, டிசெ. 24

இந்திய முன்னாள் பிரதமர் பி.வி.நரசிம்மராவ் நேற்று மாரடைப்பால் காலமானார்.

உயிரிழக்கும்போது அவருக்கு வயது 83.

நோய்வாய்ப்பட்டு புதுடில்லி அகில இந்திய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நரசிம்மராவ் நேற்றுத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார். மூச்சு விடுவதில் சிரமம் ஏற்படவே வைத்தியர்கள் தீவிர சிகிச்சைகளை மேற்கொண்டனர். ஆனாலும் சிகிச்சை பலனளிக்காது அவரது உயிர் பிரிந்தது.



1991 ஆம் ஆண்டு தொடக்கம் 1996 ஆம் ஆண்டு வரை இந்தியாவின் பிரதமராகப் பதவி வகித்துள்ளார். இவர் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மறைவுக்குப் பின்னர் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவிக்குத் தெரிவுசெய்

(18 ஆம் பக்கம் பார்க்க)



'யுனிசெவ்' பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர்களுக்கும் இடையிலான நேற்றைய சந்திப்பின்போது எடுக்கப்பட்ட படம்.

### உள்ளே...

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களில் நியமனம் பெறவிருக்கும் யாழ். மாவட்ட பட்டதாரிகளின் பெயர் விவரங்கள் இன்றைய உதயனின் 13ஆம் பக்கத்தில் வெளியாகியிருக்கின்றன.

## நோர்வேத் தூதரகம் நேற்றுத் திறப்பு!

கொழும்பு, டிசெ.24

'அந்திராக்ஸ்' பீதியால் மூடப்பட்ட நோர்வேத் தூதரகம் நேற்று மீண்டும் திறக்கப்பட்டது. கடிதம் ஒன்றில் வந்த இனந்தெரியாத வெள்ளைப் பவுடரை அடுத்து கடந்த வியாழக்கிழமை முதல் நோர்வேத் தூதரகம் மூடப்பட்டது. பரிசோதனையில், வந்தது 'அந்திராக்ஸ்' பவுடர் இல்லை என்பது தெளிவானது. இதனையடுத்து நோர்வேத் தூதரகம் நேற்றுத் திறக்கப்பட்டது. (கூ-4)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அங்கீகாரமின்றி சட்டதிட்டத்தை மீறி கட்டிய கட்டடங்களுக்கே அபராதம்

## யாழ். மாநகர ஆணையாளர் தரும் விளக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அங்கீகாரம் பெறாமல் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு அறவிடப்படும் தண்டப்பணமே அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

- இவ்வாறு விளக்கமளித்திருக்கிறார் யாழ். மாநகர ஆணையாளர் க.குணராசா.

'யாழ். மாநகரசபைப் பிரதேசத்தில் கட்டடங்களுக்கு அறவிடப்படும் தண்டப்பணம் திடீரென உயர்வு' என்ற தலைப்பில் கடந்த 22.12.2004 உதயனில் வெளியாகிய செய்திக்கு ஆணையாளர் விளக்கமளித்திருக்கிறார்.

அவர் நேற்று உதயனுக்கு அனுப்பிய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தங்களது 22.12.2004ஆம் திகதிய பிரசுரத்தில் வெளிவந்த "யாழ். மாநகரசபை பிரதேசத்தில் கட்டடங்களுக்கு அறவிடப்படும் தண்டப்பணம் உயர்வு" என்ற செய்திக்கு நன்றி தெரிவிக்கின்றேன். அது சம்பந்தமாக பின்வரும் விளக்கத்தைத் தரவேண்டியது அவசியமாகின்றது.

யாழ். மாநகரசபையின் அங்கீகாரமின்றிக் கட்டப்படும் கட்டடங்களுக்கே தண்டப்பணம் அறவிடப்படுகின்றது. யாழ். மாநகரசபையில் பல அடாத்துக்காரர்கள் மாநகரசபையின் அங்கீகாரமின்றிக் கட்டடங்களை அமைத்துள்ளார்கள். அவ்வாறு அமைக்கப்பட்ட கட்டடங்கள் மாநகரசபையின் சட்டதிட்டப் பிரமாணங்களுக்கமைய இல்லாவிட்டால், அவ்வாறான கட்டடங்களை உடைத்து நீக்குவதற்கும், சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் மாநகர சபையின் அங்கீகாரமின்றி ஆனால், மாநகர சபை சட்டதிட்டப் பிரமாணங்களுக்கு உட்பட்ட கட்டடங்களாக இருந்தால், அவை மாநகர சபையின் அங்கீகாரம் பெற்றுக்கட்டப்படாத காரணத்திற்காக அவற்றிற்குத் தண்டப்பணம் அறவிடுவதற்கும் மாநகரசபைக்கே அதிகாரம் உண்டு.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளை ஒரு தூரநோக்கோடு அபிவிருத்தி செய்வதற்கு, இத்தகைய பணி அவசியம் என்பதையும், எந்தவொரு கட்டடத்தினையும் அமைப்பதற்கு இரண்டு வாரத்திற்குள் நாம் அங்கீகாரம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றோம் என்பதையும் அறியத்தருகின்றேன்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# புத்தூரில் கடத்தப்பட்ட 4 சிறுமிகள் அல்லைப்பிட்டியில் மீட்கப்பட்டனர்

அச்சுவேலி,டிசெ.24

புத்தூரில் இருந்து வெள்ளை வானில் கடத்தப்பட்ட நான்கு சிறுமிகளும் அல்லைப்பிட்டியில் உறவினரால் மீட்கப்பட்டனர்.

கடந்த 18ஆம் திகதி சனிக்கிழமை காலை புத்தூர்ச் சந்தியில் உள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றிற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது நண்பகல் 12 மணியளவில் இந்த நான்கு மாணவிகளும் வெள்ளை வானில் வந்த மூவரால் வற்புறுத்தி வானில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் கல்வி பயிலும் சிறுப்பிட்டி வடக்கைச் சேர்ந்த பஞ்சாட்சரம் என்பவரின் மூன்றுபிள்ளைகளான சாமந்தி, சாமினி (வயது 13) இரட்டையர் - தரம் 8ஆம் வகுப்பு, சரண்யா (வயது 10) தரம் 5 ஆகியோரும் மற்றும் அதே இடத்தைச் சேர்ந்த பூபாலசிங்கம் கஜேந்தினி (வயது 11) என்பவருமே கடத்திச் செல்லப்பட்டவர்களாவர்.

சிறுப்பிட்டி பிரதான வீதியில் உள்ள தந்தையின் கடையில் இறக்கிவிடுவதாக வானில் வந்த பெண்மணி ஒருவர் தன்னைப் பிள்ளைகளின் மாமியார் என உறவுமுறை கூறி ஏற்றிச் சென்றனர் .

சிறுமிகள் நால்வரும் அழுது புலம்பி தம்மை இறக்கிவிடுமாறு அடம்பிடித்தபோது பெரிய கத்தியை எடுத்துக்காட்டி குத்திக் கொலை செய்வோம் என அச்சுறுத்தினர். சிறுமிகளின் முகத்திற்கு நீர் தெளிக்கப்பட்டது. நீர் தெளிக்கப்பட்டு சில நிமிட நேரத்தில் மயக்கமடைந்த சிறுமிகள் நான்குபேரும் பிற்பகலில் மயக்கம் தெளிந்து பார்த்தபோது புதிய இடத்தில் இருப்பதை அவதானித்து குழப்பமடைந்தனர். பிற்பகல் 4 மணியளவில் அல்லைப்பிட்டி தடைமுகாமிற்கு அப்பால் வான் நிறுத்தப்பட்டிருந்தது.

அப்பொழுது சிறுமிகள் குளறி அழுது வான் ஜன்னல் ஊடாக வீதியை பார்த்தபோது சிறுமி ஒருத்தியின் நெருங்கிய உறவினர் ஒருவர் அவ்வீதியால் வந்துகொண்டிருப்பதை அவதானித்தனர். உற்சாகமடைந்த சிறுமிகள் அவரை உறவுமுறை கூறி காப்பாற்றுமாறு குரல் கொடுத்தனர்.

இதனை அவ்தானித்த கடத்தல்காரர்கள் சிறுமிகள் நால்வரையும் வானில் இருந்து இழுத்துக் கீழே தள்ளிவிட்டு ஓடித்தப்பிவிட்டனர். பின்னர் இவர்களைப் பிரஸ்தாப உறவினர் அங்கிருந்து சிறுப்பிட்டிக்கு அழைத்துவந்தார்.

சிறுமிகளைக் கடத்தியவர்கள் தீவகத்திற்குக் கொண்டுசென்றதும் கடத்திய விதமும் பெற்றோரை அச்சம் கொள்ளவைத்துள்ளது.

சாதாரண நிலையிலும் குழம்பி உளப்பாதிப்புக்கு உள்ளாகிய நிலையில் சிறுமிகள் காணப்படுகின்றனர். இதுதொடர்பாக விடுதலைப் புலிகளிடமும் அச்சுவேலிப் பொலீஸிலும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறையீடு செய்யப்பட்டுள்ளது. (4-11)

# குடாநாட்டுப் படையினருக்கு மனிதஉரிமைக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.24

குடாநாட்டிலிருக்கும் படையினருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தினால் மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்பட்டுவருகின்றன.

இக்கருத்தரங்கினை இலங்கை மனித உரிமை நிலையத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி என்.நிரஞ்சனா, மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ருவான் சந்திரசேகரா, சிறுவர் உரிமைகள் தொடர்பான விசாரணை அதிகாரி எஸ்.பெரோஸ் ஆகியோர் இணைந்து நடத்துகின்றனர்.

கடந்தவாரம் நாகர்கோவிலில் அமைந்துள்ள 516ஆவது படைமுகாமைச் சேர்ந்த படையினருக்கும் கொடிகாமத்தில் அமைந்துள்ள 513ஆவது படைமுகாமைச் சேர்ந்த படையினருக்கும் இக்கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு படை முகாமிலிருந்தும் தலா இருநூறு படையினர் இதில் கலந்துகொண்டனர்.

அடுத்தவாரம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 512ஆவது படை முகாமைச் சேர்ந்த படையினருக்கும் வரணியில் அமைந்துள்ள 515ஆவது படைமுகாமைச் சேர்ந்த படையினருக்கும் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. (4-7)

# மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை; புதிய பிரிவுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.24

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விஞ்ஞான பீடம் அதன் கடல்வள அபிவிருத்தி நிலையத்தின் ஊடாகத் தமிழ்மொழி மூலம் நடத்தும் மீனபிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தக் கற்கைநெறிக்கான விண்ணப்பபடிவத்தினைப் பல்கலைக்கழகப் பரீட்சை அனுமதிக்கான உதவிப் பதிவாளர் பிரிவில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் - விண்ணப்பப் படிவத்தினை உதவிப் பதிவாளர், விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு ஜனவரி மாதம் 17ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் கடல்வள அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் சித்திரவடிவேல் தெரிவித்துள்ளார். (4-190)

# கிறிஸ்மஸ் தின திருப்பலி

யாழ்ப்பாணம்,டிசெ.24

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் கிறிஸ்மஸ் தினத் திருப்பலி இன்று இரவு 11.45 மணிக்கும் காலை திருப்பலி 6.45 மணிக்கும் அருட்தந்தை இ.ஸ்ரலின் அடிகளாரால் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. (4-190)

# மத்திய கிழக்கு அமைதிப் பாதையில் முக்கிய மைல்கல்லை தாண்டியுள்ளோம்

## பிரிட்டன் பிரதமர் பிளேயர் தெரிவிப்பு

ரமல்லா,டிசெ.24

மத்தியகிழக்கு அமைதி - சமாதான - பேச்சுக்களின் பாதையில் ஒரு முக்கிய மைல் கல்லைத் தாண்டியிருக்கிறோம் எனப் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன நிர்வாகத்தின் எதிர்காலம் பற்றி லண்டனில் நடக்கவிருக்கும் சந்திப்புக்கு - மாநாட்டிற்கு - இஸ்ரேலினதும், பலஸ்தீனத்தினதும் ஆதரவைத் தான் பெற்றிருக்கிறார் என்றும் - அந்த நோக்கத்தில் வெற்றியடைந்துவிட்டார் என்றும் - பிளேயர் கூறினார்.

மத்தியகிழக்கு சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் நோக்கோடு ஈராக், இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்திற்குப் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் திடீர் விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார்.

முன்னதாக ஈராக் சென்ற பிளேயர், அந்நாட்டின் இடைக்கால அரச அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார். ஈராக்கில் ஜனவரி 30ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் குறித்து அவர்களோடு பிரதமர் கலந்துரையாடினார்.

பின்னர், இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் விஜயம் செய்து இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனையும், பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் மஹ்மூத் அப்பாஸையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

"மத்தியகிழக்கு அமைதிப்பாதையின் தற்போதைய முடக்க நிலையைத் தீர்க்க, அமைதிப் பாதையை மீண்டும் வகுக்க லண்டன் சந்திப்பு ஒரு முக்கிய படிக்கல்லாக அமையும்" - என்று ரொனி பிளேயர் செய்தியாளர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

ரமல்லா நகரில் பலஸ்தீனத்தின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி யஸீர் அரபாத் நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கும் இடத்திற்கும் ரொனி பிளேயர் விஜயம் செய்து அவ்விடத்தைத் தரிசித்தார். (எ-க)

# கார்க் குண்டுத் தாக்குதலில் ஈராக்கில் 9 பேர் மரணம்!

லத்திபியா,டிசெ.24

ஈராக் தலைநகர் பக்தாத்தின் தென்பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 9பர் கொல்லப்பட்டனர்; 20இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

காரில் வேகமாக வந்த குண்டுதாரி லத்திபியா நகரிலுள்ள பொலீஸ் சோதனைச் சாவடியை மோதித் தகர்த்துள்ளார். காலை 6.30 மணியளவிலேயே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தென்பகுதியை இணைக்கும் பிரதான வீதியிலேயே இந்தத் தற்கொலைக் கார்க் குண்டுத் தாக்குதல் நடந்தது.

இங்கு காவலில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களும், வாகனங்களில் இருந்த சிவிலியன்களும் கொல்லப்பட்டவர்களில் அடங்குகின்றனர். லத்திபியா நகரம் கிளர்ச்சித் தாக்குதல்களினால பெரும் அபாயகரமான நகரமாகவே இருந்து வருகிறது.

இந்நகரில் கிளர்ச்சியாளர்களும், கொள்ளையர்களும் அதிகமாக உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

# கொங்கோவுக்கு அமைதிப்படை: அனுப்ப ஐ.நா. சபை தீர்மானம்!

புகாவு,டிசெ.24

கொங்கோவில் அரச படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதல்களைத் தடுக்க அமைதிப்படையை அங்கு அனுப்பத் தீர்மானித்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

கொங்கோவின் கிழக்குப் பகுதியில் அரச படைகளுக்கும், எதிரணிப் படைகளுக்கும் கடந்த 12ஆம் திகதிமுதல் கடும் மோதல்

## உலக அரங்கில்

இடம்பெற்றுவருகின்றது. இதனையடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் அப்பகுதியைவிட்டு வெளியேறிவிட்டனர் என்று மனித உரிமைகள் அமைப்புத் தெரிவிக்கிறது.

இதனால், பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டிய தேவை ஐக்கியநாடுகள் சபைக்கு உள்ளது. இதனையொட்டியே அமைதிப்படையை அங்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

11ஆயிரம் அமைதிப்படையினர் கொங்கோவில் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவர். இரு தரப்பினரும் எல்லைமீறிச் செயற்படாமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். மீறிச் செயற்பட்டால் அவர்கள்மீது அமைதிகாப்புப் படையினர் எதிர் நடவடிக்கைகளில் ஈடுபடுவர் - என்று ஐ.நா.சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-க)

# கடத்தப்பட்ட பிரான்ஸ் பத்திரிகையாளர் தீவிரவாதிகளால் ஈராக்கில் விடுதலை!

## அவர்கள் நேற்று நாடு திரும்பினர்

பரிஸ்,டிசெ.24

ஈராக்கில் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்ட பிரான்ஸ் நாட்டுப் பத்திரிகையாளர்கள் இருவர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி ஈராக்கில் தங்கியிருந்து பணியாற்றிய ஜார்ஜஸ் மால்ஃனொட் (வயது-41), கிறிஸ்டியன் செஸ்நாட் (வயது-37) ஆகிய இருவரையும் தீவிரவாதிகள் பணயக்கைதிகளாகப் பிடித்துச் சென்றனர்.

இவர்களை விடுதலை செய்யவேண்டும் எனில், பிரான்ஸில் முஸ்லிம் மாணவிகள் பர்தா (ஹிஜாப்) அணிந்துவருவதை தடை செய்யும் வகையில் இயற்றப்பட்ட சட்டத்தை ரத்துச்செய்யவேண்டும் என்று தீவிரவாதிகள் நிபந்தனை விதித்தனர். ஆனால், அந்த நிபந்தனையைப் பிரான்ஸ் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்நிலையிலேயே இவ்விரு பத்திரிகையாளர்களும் செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் நேற்றுப் பிரான்ஸ பயணமாகினர்.

"வழக்கமான கிறிஸ்மஸ் தினத்தைவிட இந்த ஆண்டு கிறிஸ்மஸ் தினம் தமக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்திருக்கிறது" - என்று இவ்விரு பத்திரிகையாளர்களினதும் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் 120இற்கும் மேற்பட்ட வெளிநாட்டவரைத் தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றுள்ளனர். இவர்களில் சுமார் 25பேர் கோரமாகக் கொலை செய்யப்பட்டும் உள்ளனர். மேலும் பலர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி இரு பத்திரிகையாளர்களையும் விடுவிக்க எவ்விதப் பணயத்தொகையும் வழங்கப்படவில்லை என்று பிரான்ஸ் ஜனாதிபதி ஜெக் சிராக் தங்களிடம் உறுதியாகக் கூறினார் என பிரான்ஸ் அரசியல் தலைவர்கள் தெரிவித்தனர்.

இவ்விரு பத்திரிகையாளர்களும் அமெரிக்க உளவாளிகள் அல்லர் என்பதை உறுதிசெய்த பின்னரே விடுதலை செய்துள்ளோம் என்று இவர்களைக் கடத்தி வைத்திருந்த இஸ்லாமிய இராணுவம் என்ற தீவிரவாத அமைப்புத் தெரிவித்திருக்கின்றது. (எ-க)

# வடமராட்சியில் புதன்கிழமை மாபெரும் மக்கள் எழுச்சி

## எழுச்சிப் பேரவை, மாணவர் ஒன்றியம் ஏற்பாட்டில்

கரவெட்டி,டிசெ.24

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கப் பின்னடித்துக் கொண்டு போருக்கான தயார்ப்படுத்தல்களில் இறங்கியிருக்கும் ஸ்ரீலங்கா அரசின் போக்கினைக் கண்டித்து மாபெரும் மக்கள் எழுச்சிப் போராட்டம் ஒன்று வடமராட்சியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பஸ் நிலையப் பகுதியில் ஒன்று திரளும் மக்கள் அங்கு இந்த எழுச்சிப் போராட்டத்தை நடத்துவர்.

வடமராட்சி எழுச்சிப் பேரவை மற்றும் வடமராட்சி மாணவர் ஒன்றியம் ஆகியன இந்த எழுச்சிப் பேராட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

வடமராட்சியின் பல பாகங்களில் இருந்தும் வந்து பொதுமக்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்வர்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி மக்கள் போராட்டத்தில் ஈடுபடுவர்.

சகல பாகங்களிலிருந்தும் ஊர்வலமாக வருகைதரும் பொதுமக்கள் பருத்தித்துறை பஸ் நிலையத்தை வந்தடைந்ததும் அங்கு மாபெரும் எழுச்சிக் கூட்டம் இடம்பெறும்.

அங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பல பிரமுகர்கள் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசு காட்டி வரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து உரைநிகழ்த்துவார்கள்.

இறுதியில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் வைத்து ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்று பொதுமக்களால் பிரதேச செயலரிடம் கையளிக்கப்படும்.

எழுச்சி ஊர்வலம் இடம்பெறும் தினத்தன்று வடமராட்சிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் நண்பகல் வரை மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசு, சமாதான வழிமுறைகளைப் புறந்தள்ளிவிட்டுப் போருக்கான தயார்படுத்தல்களில் இறங்கியிருப்பதனைக் கண்டித்தும் -

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் - தென்மராட்சிப் பிரதேசத்திலும் மனித சங்கிலிப் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

(ஐ-70-5)

## உலர் உணவு விநியோகம்

கொழும்புத்துறை,டிசெ.24

வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட குடாநாட்டு மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உடனடி மனிதாபிமான உதவித் திட்டத்தின் கீழ் உலர் உணவுப் பொருள்களை வழங்கிவருகிறது.

கொழும்புத்துறை, கரவெட்டி, சங்கானைப் பகுதிகளில் உள்ள வெள்ள அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

கொழும்புத்துறை ஜே/61, ஜே/62 பிரிவுகளில் 100 குடும்பங்களுக்கும், சங்கானையில் 30 குடும்பங்களுக்கும் கரவெட்டியில் 65 குடும்பங்களுக்கும் கடந்த சில நாள்களில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டதாக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட ஏனைய பகுதிகளுக்கும் உதவிப் பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-30)

## ஜனவரி முதல் கறவைப் பசுக்கள் காப்புறுதித் திட்டத்தில் சேர்ப்பு

வலி.தெற்கு,டிசெ.24

உள்ளூரில் பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் கறவைப் பசுக்களை காப்புறுதி செய்யும் திட்டமொன்றினை ஜனவரி மாதம் தொடக்கம் அறிமுகம் செய்ய கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

நல்ல நிலையில் உள்ள கறவை இன பசுக்களின் விலை ஒரு லட்சம் ரூபா வரை அதிகரித்துள்ளது. இந்நிலையில் ஒருசில பசுமாடுகளைப் பராமரிப்பவர்கள் அவற்றில் ஒன்றிரண்டு பசுக்களை இழக்கும் சந்தர்ப்பங்களில் பெரும் நஷ்டத்துக்கு உள்ளாகின்றனர். இவ்வாறு பாதிப்படைபவர்கள் உரிய நிவாரணம் பெறவும் அவர்கள் தொடர்ந்தும் பால் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு ஊக்குவிக்கவுமே இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் உள்ளூரில் பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதன் மூலம் பால்மா இறக்குமதிக்காக வருடந்தோறும் செலவிடப்படும் ஒரு கோடி 10லட்சம் ரூபாவை படிப்படியாக குறைக்க முடியும் என்றும் -

இதற்கென இந்தியாவிலிருந்து ஆயிரத்து 500 நல்லினப் பசுமாடுகளை இங்கு தருவித்து அவற்றின் மூலம் பெறப்படும் பசுக்கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கவும் அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-203-,52)





யாழ். போதனா வைத்தியசாலைக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் 38 பேர் கடந்த 19 ஆம் திகதி இரத்த தானம் செய்தனர். அவர்கள் இரத்த தானம் செய்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. (8)

### கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

## நிவாரணப் பொருள்கள் தென்மராட்சியில் சேகரிப்பு

கரவெட்டி,டிசெ.24

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென வடமராட்சிப் பகுதியில் உலர் உணவுப் பொருள்கள் சேகரிக்கும் பணி மும்முரமாக இடம்பெறுகின்றது.

வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை, யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வடமராட்சி மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் ஆகியோர் உலர் உணவுப் பொருள்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

சேகரிக்கப்படும் பொருள்கள் பொதி செய்யப்பட்டு இவ்வார இறுதிக்குள் கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5-70)

## விசேட தேவைக்குரியோர் விழா

யாழ்ப்பாணம்,டிசெ.24

வேலணைப் பிரதேச செயலர் பிரிவிற்கான சர்வதேச விசேட தேவை உடையோர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

உதவிப் பிரதேச செயலர் மு.நந்தகோபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விசேட தேவை உடையோர் கௌரவிப்பும் விசேட தேவைத் தொண்டர்களுக்கான அன்பளிப்புகளும் வழங்கப்படவுள்ளது.

(எ-13)

## நெருப்புக்காய்ச்சல் பரவுவதைத் தடுக்க மானிப்பாய் சுகாதாரப் பிரிவில் ஏற்பாடுகள்

வலி.தென்மேற்கு,டிசெ.24

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நெருப்புக்காய்ச்சல் நோய் பரவி வருவதால் அதற்கான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சில்லாலையில் ஒரு வீட்டில் இரு பெண்களுக்கும், பண்டத்தரிப்பு, பிரான்பற்று பகுதியில் ஒன்பது வயது சிறுமி ஒருவருக்கும், சண்டிலிப்பாயில் ஒருவருக்கும் நெருப்புக் காய்ச்சல் நோய் ஏற்பட்டிருப்பது பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் கடந்த வாரம் காய்ச்சல் எனத் தெரிவித்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறச் சென்றபோது அங்கு ஆய்வுகூடப் பரிசோதனை மேர்கொள்ளப்பட்டது. இதன் போது இவர்களுக்கு நெருப்புக் காய்ச்சல் நோய் ஏற்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இவர்களின் வீடுகளுக்குச் சென்று கிணறுகளுகக்கு 'குளோரின்' மருந்து இட்டதுடன் சுகாதார அறிவுரைகளையும் வழங்கினார்கள்.

இதேவேளை -

அண்மையில் இப்பிரதேசத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் வீடுகளிலுள்ள கிணறுகளும் பாதிக்கப்பட்டுள்ளதால் சகல வீட்டு கிணறுகளுக்கும் 'குளோரின்' இட்டுக்கொள்ளவேண்டும் என்றும் -

கொதித்தாறிய நீரையே குடிதண்ணீராகப் பாவிக்கவேண்டும் என்றும் -

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பான துண்டுப்பிரசுரம் ஒன்று இப்பிரிவிலுள்ள சுகாதார பரிசோதகர்களால் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை -

இப்பிரிவில் வீட்டுப் பாவனையிலுள்ள நுளம்பு வலைகளுக்கு 'பேமத்திரின்' மருந்து தோய்த்துக் கொடுக்கும் பணி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவு ரீதியாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுபற்றிய விவரங்களை தத்தமது பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளமுடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-135)

## பண்டத்தரிப்பு வாய்க்கால் புனரமைப்பு

வலி.தென்மேற்கு,டிசெ.24

பொதுமக்கள் செய்த முறைப்பாட்டினை அடுத்து பண்டத்தரிப்பு பிரதான வீதியில் மூடப்பட்டிருந்த வெள்ளநீர் வழிந்தோடும் வாய்க்கால், வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் பெய்த மழை காரணமாக பண்டத்தரிப்புச் சந்தை மற்றும் நகர வீதி ஓரத்தில் வெள்ளம் பெருமளவில் தேங்கி நின்றதாலும் -

சுற்றாடலில் உள்ள வீடுகளில் வெள்ளம் புகுந்ததாலும் -

இப்பகுதி மக்கள் ஒன்று சேர்ந்து கையொப்பமிட்டு, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். பொறியியலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருந்தனர். அத்துடன், நேரில் சென்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்தில் முறைப்பாடு செய்தனர்.

பல வருட காலமாக மூடப்பட்டிருந்த இந்த வெள்ள வாய்க்கால்(கான்) புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. இந்த வாய்க்கால் தூர்ந்துபோகவிடாது சிமெந்தினால் பலமாகக் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் பொதுமக்கள் தரப்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-135)

## மினிபஸ் மிதி பலகைப் பயணம்; நடத்துநருக்கு இனிமேல் அபராதம்

யாழ்ப்பாணம்,டிசெ.24

தனியார் பஸ்வண்டிகளில் மிதிபலகையில் பயணிகளை ஏற்றிச்சென்றால் சம்பந்தப்பட்ட நடத்துநர்களுக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதமாக விதிக்கப்படும்.

தனியார் போக்குவரத்துச் சங்கங்களின் இணையம் இந்த விதிமுறையை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது.

இதுதொடர்பாக இணையப் பிரதிநிதி ஒருவரைக் கேட்டபோது அவர், தெரிவித்ததாவது:-

அண்மைக்காலமாக குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. இதற்கு பஸ்வண்டிகளில் அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றிச் செல்வதும் ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது. இதைவிட பஸ் வண்டிகளில் மிதி பலகைகளில் பயணிகளை ஏற்றிச்செல்வதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களையும் ஆபத்துக்களையும் எதிர்நோக்கிவருகின்றனர் என்று முறைப்பாடுகள் எமது சங்கத்தில பதிவாகியுள்ளன.

இதனைக் கருத்திற்கொண்டு இவ்வாறான அபராதம் விதிக்கும் நடைமுறையை மேற்கொள்ளவுள்ளதாக சகல பஸ் உரிமையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிவித்தல் தொடர்பாக மினிபஸ் உரிமையாளர்கள் அதீத அக்கறை கொள்ள வேண்டுமெனவும் அதன் மூலம் பயணிகளின் அசௌகாயங்களையும் தவிர்க்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-13)

நத்தார் நற்சிந்தனை
"மீட்பின் அரசனாய் நீயும் மீண்டும் ஒருமுறை வந்துவிடு. சமாதானத்தின் தலைவனாய் நீயும் எம்மண்ணில் உதித்துவிடு."
ஏஞ்சல் டிலைட் குளிரகம்
360/9, பிரதான வீதி.
யாழ்ப்பாணம்.
(C/39983)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head Office
No.500, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel.:2505632 - 3 Fax:2500626
Jaffna Office
No.86, PointPedro Road, Jaffna. Tel.:021-2226242
Fax:021-2225600
Trinco Office
No.47, Kandy Road, Trincomalee.
Tel.:026-2221519
Fax:026-2221519
Branch
No. 295, Jampettah Street, Colombo-13 Tel.:2430782 Fax:2430782
கொழும்பு - யாழ். | யாழ். - கொழும்பு

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்குண்டு

Pure Bread GREATDANE நாய்க்குட்டிகள், வளர்த்த DANE பெண்நாய் மற்றும் SINGER RECONDITIONED REFRIGERATOR என்பன உடன் விற்பனைக்குண்டு. இல. 220, கண்டி வீதி, யாழ்ப்பாணம் (பெண்டிகொஸ் தேவாலயத்திற்கு அருகில்). 077 6512285. (40004)

கலர்மீன்கள், தொட்டிகள் அதற்கான அனைத்துப் பொருள்கள், குருவிகள், கூடுகள், பூங்கன்றுகள், செவ்வரத்தை, குறோட்டன், றோஸ், சாடிகள் என்பன விற்பனைக்குண்டு. 40/11 சீனியர் லேன், வண்ணார்பண்ணை, (தட்டாதெருச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (39998)

அல்சேசன் நாய்க்குட்டிகளும் பெண்நாயும் விற்பனைக்குண்டு. (ஊர்நாய் இலவசம்) தொடர்பு: த.பாலசூரியன், 147, நாவலர் வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம். (39976)

நல்ல நிலையிலுள்ள போட்டோப் பிரதி எடுக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: T.P.: 0777 588515. (39979)

75 கல்பேட் விற்பனைக்குண்டு. கூடுதல் விலை கோருபவர்களுக்கு வழங்கப்படும். சந்திக்கும் நேரம் தினசரி காலை 8 மணிமுதல் 9.30 வரை. தொடர்புகளுக்கு: நா.கமலநாதன், 152/1, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (39999)

## மோ.சைக்கிள் வாடகைக்கு

மணித்தியாலம் மற்றும் நாளாந்த வாடகைக்கு இரு பாலாருக்கும் மோட்டார் சைக்கிள் வாடகைக்கு வழங்கப்படும். தொடர்பு: 360/5 பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில), யாழ்ப்பாணம். T.P.: 0776 544544, 077 6660177. (39228)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா, புறொயிலர் குஞ்சுகள் இன்று (24.12.2004) மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, றஞ்சித் - 517, ஸ்ரான்லி வீதி, P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, T.P.: 222 2867, 222 3529. (39956)

## கைமாறிவிட்டது

கொக்குவிலைச் சேர்ந்த சிவநேசன் பிரபாகரன் என்பவருடைய லுமாலா சைக்கிள் யாழ்நகரில் (17.12.2004) வெள்ளிக்கிழமை கைமாறி விட்டது. அதற்குப் பதிலாக றலி சைக்கிள் ஒன்று தற்போது எம்மிடம் உள்ளது. உரியவர் தயவு செய்து 0776257962, 077489612 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். (40004)

## தவறிவிட்டது

20.12.2004 இல் நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்துக்கும் ஆனைக்கோட்டை பழைய பொலீஸ் நிலையத்துக்குமிடையில் மேசன் வேலைக்குரிய ஆயுதங்கள் அடங்கிய பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் M.பரமானந்தம் 'ஜயபரதேவி இல்லம்' மணிமண்டபம் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய் அல்லது T.P.:021 222 2195, 021.222 7066 இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (40007)

## சேவை

55,000 அமெரிக்க விசா லொத்தர் (Green Card) விண்ணப்பிக்க முடிவுதிகதி டிசெம்பர் 31. தாமதத்தைத் தவிர்க்க விண்ணப்பதாரர் மனைவி, பிள்ளைகள் சகலரதும் முழுப்பெயர்கள், பிறந்தநாள்கள், விலாசத்தையும் எழுதி, 2"x2" சகலரதும் போட்டோக்களுடனும் ரூபா 300/- மணியோடருடனும் அனுப்பவும். தொடர்பு: PENGUIN BOOK SHOP, B2, F23, Bloemendhal Flats, Kotahena. T.P.: 077 308 1764, 2438367. (C/39861)

## சிறுவர்களுக்கு சேமிப்புக் கணக்கு

யாழ் பிரதேச செயலக யாழ்நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியினால வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பாடசாலை செல்லும் சிறுவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட 'சிசுரக்க' சேமிப்புக் கணக்குப் புத்தகம் கையளிக்கும் வைபவம் நேற்று யாழ்நகர் கிழக்கு சமுர்த்தி வங்கிப் பணிமனையில் முகாமையாளர் என்.கீயுமன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் 47 சிறுவர்களுக்கான வங்கிப்புத்தகங்களை யாழ்நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியின் உதவி முகாமையாளர் ஏ.எஸ்.சிறிதரன், சமுர்த்தி வங்கியின் வலய உதவிமுகாமையாளர் செல்வி ஏ. நிஷாந்தினி ஆகியோர் வழங்கினர். (ஐ-190)

## வலி.தென்மேற்கில் முக்கிய வீதிகள் பலவும் சேதம்

வலி.தெ.மே.,டிசெ.24

அண்மையில் பெய்த பெரு மழையினாலும், வெள்ளத்தினாலும் வலி. தென மேற்குப் பிரதேசத்திலுள்ள முக்கிய வீதிகள் பலவும் சேதமடைந்துள்ளன.

மானிப்பாய் சந்தியிலிருந்து யாழ்நகர் செல்லும் பிரதான வீதியும் பலத்த சேதமடைந்துளளது.

குண்டும் குழியுமாக இந்த வீதி உளளதால பயணிகள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தங்கள் போக்குவரத்தை மேற கொண்டு வருகின்றனர். (எ-135)

## VACANCIES

### Assistant Teachers

Applications are called for the following positions:

**Tamil Honours Degree Holders:** (2 vacancies)

**Dance:** A Graduate of the College of Fine Arts with experience in teaching and training for school performances.

**Eastern Music:** A Graduate of the College of Fine Arts with experience in teaching and training for school performances.

**Geography Honours Degree:** A Special Degree in Geography with teaching experience in the Advanced Level Classes.

**Primary Trained Teachers:** (3 vacancies)

**Montessori (Nursery) Trained Teachers :** (2 vacancies)

**Warden:** with experience in dealing with children in school hostels.

Applications should reach the following address on or before the 3rd of January 2005.

Address:
**The Principal,**
Uduvil Girls College,
Uduvil, Chunnakam.

(C/39997)(42-45-19)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

தொண்டமானாறு 3ஆம் சந்தியைச் சேர்ந்த
கனகராசா (பாபு) ஜெயராணி
தம்பதிகளின் புதல்வி

### புவிதா

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (24.12.2004) கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அப்பம்மா, கனடாவில் இருக்கும் மாமா, அத்தை, மச்சாள், பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், தொண்டமானாறு பெரியப்பா குடும்பத்தினர், நவாலி பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அம்மம்மா, தாத்தா, பெரியம்மா, பெரியமாமா, அத்தை, சின்னமாமா மற்றும் உற்றார், உறவினர்கள் செல்வச்சந்நிதியான் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.



3ஆம் சந்தி,
கெருடாவில்,
தொண்டமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்.

## அனைவருக்கும் புலமைப்பரிசில்

# COMPUTER EXPRESS
## Institute of Information Technology

இலங்கையில் தமிழ் மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச்சஞ்சிகையின் கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு வழங்கப்படும்

## புலமைப்பரிசில் திட்டம் - 2005

அனைத்து கற்கைநெறிகளிற்கும் 80% புலமைப்பரிசில் வழங்குவதில் பெருமையடைகின்றோம்.

**80% OFF**

| Course | Duration | Old Fee | Fee |
|---|---|---|---|
| Diploma in Computer Science | 4 மாதம் | ~~6,000~~ | 1,200 |
| Honours Diploma in Computer Science | 4 மாதம் | ~~8,000~~ | 1,600 |
| Diploma In WebPage Designing | 4 மாதம் | ~~6,000~~ | 1,200 |
| Diploma in Graphic Designing | 4 மாதம் | ~~6,000~~ | 1,200 |
| Diploma In Desktop Publishing | 4 மாதம் | ~~5,000~~ | 1,000 |
| Diploma in Hardware Engineering | 3 மாதம் | ~~5,000~~ | 1,000 |
| Diploma in AutoCAD | 3 மாதம் | ~~5,000~~ | 1,000 |
| Accounting Package | 3 மாதம் | ~~7,000~~ | 1,400 |
| MS Office | 3 மாதம் | | 500 |

**Advances Courses** — **50% OFF**

| Course | Old Fee | Fee |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma In Multimedia | ~~5000~~ | 2500 |

January 30th இற்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I - 16/01/2005
Batch II - 22/01/2005
Batch III - 24/01/2005
Batch IV - 30/01/2005

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புகள் நடாத்தப்படும், சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

Maniyam Building
இல. 15, சிறாம்பியடி வீதி,
யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0777917781

உதயன்

# நோர்வேக்காக அமெரிக்கக் குரல்

ஜே.வி.பியின் பகட்டுப் பேச்சு, உணர்ச்சியைத் தூண்டிவிட்டு மோசமான ஆபத்தையும், எதிர்வுகூறமுடியாத விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடியது.

- இப்படி எச்சரித்திருக்கின்றார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லுன்ஸ்டெட்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கும், அது தொடர்பான நோர்வே அனுசரணைப் பணிக்கும் எதிராக ஜே.வி.பியினால் வழிநடத்தப்படுகின்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமை நாடுகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துத் தமது ஆதங்கத்தைத் தெரிவித்திருந்தன.

இணைத்தலைமை நாடுகளில் நோர்வே தவிர்ந்த மூன்று நாடுகளே - அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவையே - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் இது தொடர்பான தமது விசனத்தை நேரில் வெளிப்படுத்தியதோடு அதனை ஒரு கூட்டறிக்கை மூலமும் பகிரங்கப்படுத்தியிருந்தன.

இது தொடர்பாக ஜே.வி.பி. அந்த மூன்று நாடுகளின் பிரதிநிதிகளான - அமெரிக்கா, ஜப்பான் மற்றும் நெதர்லாந்து தூதர்களுக்கு - கடந்த 16 ஆம் திகதி பதில் ஒன்றை அனுப்பி வைத்திருந்தது.

அந்தப் பதிலுக்குக் காட்டமான பதில் கடிதம் ஒன்றைத் தமது சொல் அடுக்குகளோடு ஜே.வி.பிக்கு அனுப்பி வைத்திருக்கின்றார் அமெரிக்கத் தூதுவர்.

அதிலேயே ஜே.வி.பியின் வெறும் சொல் அலங்காரப் பகட்டுப்பேச்சு, மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

"புலிகளின் பயங்கரவாதச் செயல்களுக்கு நோர்வே அங்கீகாரம் வழங்குகின்றது; புலிகள் தமது இலக்கை அடைய நோர்வேயும், கண்காணிப்புக்குழுவும் உதவுகின்றன. - என்ற சாரப்பட ஜே.வி.பியும், ஏனைய குழுக்களும் கூறுவது இது விடயத்தில் நோர்வேயின் நோக்கங்களையும், எண்ணங்களையும் நீதியற்ற முறையில் மாசுபடுத்துவதோடு, முழு சமாதான முயற்சிகளையுமே மோசமாகப் பின்னடையவும் செய்யும், அதனால்தான் இத்தகைய ஜே.வி.பியின் கூற்றுக்கள் எம்மை மலைக்கச் செய்துள்ளன. வார்த்தைகளுக்கு விளைவுகள் உண்டு. இத்தகைய பகட்டுப் பேச்சுகள் உணர்ச்சியைத் தூண்டிவிடும் ஆபத்தை உடையவை; எதிர்வுகூறமுடியாத விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை." - இப்படித் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார் அமெரிக்கத் தூதுவர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஏனைய இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளோடு தாம் சந்தித்தமை பற்றிய அறிக்கையில், நோர்வேயின் நியாயமான பங்குபணி தவறான முறையில் மாசு கற்பிக்கப்படுவதைத் தாங்கள் சுட்டிக்காட்டிய விடயங்களே இடம்பெற்றிருந்தன என்றும் - அந்த அறிக்கை அந்த விவகாரம் சம்பந்தப்பட்டதால் அது பற்றி மட்டுமே அதில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது என்றும் - அமெரிக்கத் தூதுவர் கூறியிருக்கின்றார்.

அதற்காகப் புலிகளின் சில தவறான செயல்களை தாங்கள் (அமெரிக்கர்கள்) அங்கீகரிக்கின்றார்கள் என்று ஜே.வி.பி. அர்த்தம் கொள்ளக்கூடாது என்றும் தூதுவர் லுன்ஸ்டெட் கூறியிருக்கின்றார்.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தங்கள் நாட்டில் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்த்திருப்பதையும், புலிகளுக்கு எதிராகத் தமது நாடு உறுதியான நடவடிக்கைகள் எடுத்திருப்பதையும் அவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஜே.வி.பி., எதிர்க்கட்சியில் இருந்தபோது பெரும்பான்மை சிங்களவர்கள் மத்தியில் தனது ஆதரவை வளர்ப்பதற்காகப் பேரினவாதத்தைத் தூண்டிவிட்டது. பௌத்த - சிங்கள மேலாண்மைவாதத் தீயை மூட்டிவிட்டு அதில் அரசியல் லாபம் என்ற வகையில் குளிர்காய்ந்தது.

தாம் ஆட்சியில் ஏறுவதற்காக இந்தப் பேரினவாதிகளை அணிசேர்த்து அணைத்துக்கொண்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

இப்போது ஆட்சிக் கட்டில் இருதரப்பினரும் சேர்ந்து ஏறியாகிவிட்டது.

அரசுக் கூட்டமைப்பில் இரண்டாவது பெரிய பங்காளியாக விளங்கும் ஜே.வி.பி. தன்னை முழுமையாக வளர்த்து, தனித்து ஆளும் கட்சியாக உயர்வதற்குக் கனவு காண்கின்றது; முழு மூச்சுடனும் வீச்சுடனும் செயற்படுகிறது.

அதற்காக இனவாதத்தை மேலும் மேலும் கிளப்பிவிட்டு குறுகிய வழியில் அரசியல் லாபமீட்ட முயல்கிறது.

இனவாதத்தைக் கிளப்புவது நாட்டைப் பாதித்து அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்துகொண்டே ஜே.வி.பி. அதனைத் தொடர்கின்றது.

ஆனால், எதிர்க்கட்சித் தரப்பில் இருந்துகொண்டு அப்படிச் செய்வது வேறு; இப்போது ஆளும் தரப்பில் இருந்துகொண்டு அதே குசும்பைப் பண்ணுவது வேறு. அது மெத்தவும் வெறுக்கத்தக்கது; கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

அதனால்தான் முதலாவது குட்டே மோதிரக் கையால் விழுந்திருக்கின்றது. சர்வதேச பொலீஸ்காரனான அமெரிக்காவின் விசனத்துக்கும் எரிச்சலுக்கும் அது ஆளாகியிருக்கின்றது.

ஜே.வி.பி. இனியும் தன்னைத் திருத்திக்கொள்ளாவிட்டால் அமெரிக்கத் தூதுவர் சுட்டிக்காட்டியிருப்பது போல எதிர்வு கூறமுடியாத விளைவுகளை ஜே.வி.பியும் அதைக் கொண்டுள்ள இந்த அரசும், அந்த அரசு ஆட்சி செய்யும் இந்த நாடும் சந்திக்கநேரும். அது தவிர்க்க முடியாததாகிவிடும்.

### இந்தியப் படையின் சுற்றிவளைப்பில் வீரச்சாவடைந்த

# மேஜர் முரளி மற்றும் 9 போராளிகளுக்கு கோப்பாயில் நேற்று உணர்வுபூர்வ அஞ்சலி

கோப்பாய், டிசெ.24

இந்திய அமைதிப் படையின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவடைந்த மேஜர் முரளி உட்பட 10 மாவீரர்களின் 17 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கோப்பாய் - உரும்பிராய் வீதியில் அமைந்துள்ள மாவீரர்களின் நினைவுத் தூபியில் நேற்றுமுற்பகல் 10.30 மணிக்கு நினைவுதின நிகழ்வுகள் இடம்பெற்றன.

யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் ச.குணேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை கோப்பாய் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சங்கர் ஏற்றினார். நினைவுச் சுடரினை மேஜர் முரளியின் தாயார் ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து வீரவேங்கை நிராகரனின் உருவப் படத்திற்கு யாழ். மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஆர்வலனும், கப்டன் காந்தியின் உருவப் படத்திற்கு சர்வதேச மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணனும் - லெப். தர்சினியின் உருவப் படத்திற்கு துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணனும், வீரவேங்கை நிர்மலாவனின் உருவப்படத்திற்கு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலனும், வீரவேங்கை நிதியின் உருவப்படத்திற்கு யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணாவும், வீரவேங்கை பஞ்சனின் உருவப்படத்திற்கு கோப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சங்கரும், வீரவேங்கை சுதாவின் உருவப்படத்திற்கு யாழ்.தேசியக் கல்வியியல் கல்லூரி மாணவன் சுதனும், வீரவேங்கை அமுதனின் உருவப்படத்திற்கு யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவரான வேணுகோபனும் ஈகைச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து போராளிகள் மற்றும் பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தினர். நினைவுரைகளும் இடம்பெற்றன. (ஐ-5-86-6-72)



இந்திய அமைதிப்படையின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவடைந்த மேஜர் முரளி உட்பட 10 மாவீரர்களின் நினைவு தின நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள். யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் பொதுச்சுடரேற்றுவதையும், மேஜர் முரளியின் தாயார் ஈகச்சுடரேற்றி அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

படங்கள் – வசந்தன்

# மலையகத்தின் மாற்றத்துக்கு மூன்றாவது சக்தி அவசியம்

## புதிய ஜனநாயகக் கட்சிக் கூட்டத்தில் தகவல்

கொழும்பு, டிசெ.24

மலையகத்தில் மூன்றாவது அரசியல் சக்தி உருவாகின்றது.

இவ்வாறு கடந்த 19 ஆம் திகதி ஹட்டன் சக்தி திருமண மண்டபத்தில் நடைபெற்ற புதிய ஜனநாயகக் கட்சியின் நான்காவது மலையகப் பிரதேச மாநாட்டையொட்டிய பகிரங்கப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது-

சகல தரப்பிலிருந்தும் பேச்சைத் தொடங்குமாறு இன்றைய அரசாங்கத்திற்கு வற்புறுத்தல்களும், வேண்டுகோள்களும் விடுக்கப்பட்டு வந்தபோதிலும் அவற்றுக்கு செவிமடுக்கும் நிலையில் அரசாங்கம் இல்லாத நிலையே நீடிக்கின்றது. நிலைமை இவ்வாறெனில் நியாயமான அரசியல் தீர்வு கிடைக்கும் என்றோ, நிரந்தர சமாதானம் ஏற்படும் என்றோ எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இருபத்தைந்து வருடகால விட்டுக் கொடுக்காத ஆயுதப் போராட்டத்திற்குப் பின்பும் பேரினவாத மேட்டுக்குடி ஆளும் வர்க்கம் இறங்கிவரத் தயார் இல்லை என்ற நிலையில், மலையக மக்கள் வெறுமனே நாடாளுமன்றத் தலைமைகளுக்கு வாக்களித்து வருவதால், தமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க முடியாது. பேரினவாத ஆட்சிகளில் மாறி மாறி அமைச்சுப் பதவியைப் பெறும் தலைமைகளை இனிமேலும் நம்பினால் மலையக மக்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்திற்குள் அமிழ்ந்து இருக்கவேண்டிய நிலையே தொடரும்.

எனவே, உறுதியான வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்து, தமது அடிப்படைக் கோரிக்கைகளையும் அன்றாட வாழ்வுக்கான தேவைகளையும் வென்றெடுக்க, மூன்றாவது அரசியல் சக்தியைக் கட்டியெழுப்ப மலையக மக்கள் குறிப்பாக இளம் தலைமுறையினர் முன்வரல்வேண்டும். அத்தகைய மலையக மக்கள் மத்தியில் தனது அரசியல் வேலைகளை முன்னெடுத்தும் வருகின்றது. எனவே, மலையகத்தின் மாற்றத்திற்கு உழைக்கும் அனைத்து சக்திகளையும் போராட்டக் களத்தில் அணிதிரளுமாறு எமது கட்சி வேண்டுகோள் விடுக்கின்றது.

மலையக மக்கள் முன் னெடுக்கும் வெகுஜனப் போராட்டங்களுக்கு வடக்கு - கிழக்கு மக்களின் ஆதர வும் அரவணைப்பும் உறுதியானதாகக் கிடைத்தே தீரும். இரு புறத்திலும் சுயலாபங்கள் தேடும் நாடாளுமன்றத் தலைமைகளின் வெற்றுப் பேச்சுக்களை நிராகரித்து ஒதுக்கிவிட்டு, வெகுஜன அரசியல் போராட்டத் களத்தில் மலையக மக்களும், வடக்கு - கிழக்கு மக்களும் ஒன்றுபட்டு நிற்பதே பேரினவாத ஆளும் வர்க்கத்திற்கு எதிரான பலம்மிக்க போராட்ட சக்தியை உருவாக்கும் - என்றார்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி இ.தம்பையா உரையாற்றுகையில் கூறியதாவது-

மலையக மக்கள் இதுவரை பெற்ற சகல உரிமைகளும் பல்வேறுபட்ட போராட்டங்களினாலும் தொழிலாளர்கள் செய்த தியாகங்களினாலும் கிடைக்கப்பெற்றவைகளே அன்றி சொத்து, சுகம் பெற்ற தொழிற்சங்க நாடாளுமன்றத் தலைமைகளால் கிடைத்தவை அல்ல என்ற உண்மை உணரப்படவேண்டும்.

மலையகத்தில் பெரும் அழிவுகளைக் கொண்டுவர இருக்கும் மேல்கொத்மலை நீர் மின்சார உற்பத்திக்கான அணைத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த இன்றைய மலையகத்தில் இரண்டு நாடாளுமன்றத் தலைமைகளும் தயாரில்லை. ஆனால், மாறிமாறி இரண்டு பேரினவாத ஆட்சிகளிலும் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதிலும் சொத்து, சுகம் தேடுவதிலுமே அவை அக்கறைகாட்டி நிற்கின்றது. இவர்களது போலித்தனத்தை உணர்ந்து கொண்டதாலே மூன்றாவது அரசியல் சக்தி அரங்கிற்கு வர ஆரம்பித்துள்ளது. அதனை முறியடிக்கவே மலையகத்தில் தீவிரவாதம் தலை தூக்கிவிட்டுள்ளதாக கருங்காலித் தலைமை ஒன்று ஆட்சிக்கு கோள் மூட்டி நிற்கிறது. இத்தகைய சூழ்ச்சிகளை எல்லாம் முறியடித்துத் தூர நோக்கில் மலையக மக்கள் தமது இன வர்க்க அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கப் போராடும் உறுதியைக் கொள்ளல் வேண்டும் - என்றார் அவர்.

மலையகப் பிரதேச செயலாளர் ச.பன்னீர்ச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிவ.இராஜேந்திரன், வெ.மகேந்திரன், சோ.தேவராஜா, கா.கதிர்காமநாதன், டொன். பொஸ்கோ, என்.ஆர்.வரதராஜா ஆகியோர் உரையாற்றினர். மலையக மக்களின் அவல வாழ்வையும், அரசியல் விழிப்புணர்வையும் மையப்படுத்தி புரட்சிகரப் பாடல்கள் இசை நிகழ்ச்சியாகவும், வீதி நாடகமாகவும் இடம்பெற்றன. (எ-க)

## உதயவாக்கு

பலன் கருதா நல்வினைகள்
மனதைத் தூய்மையாக்கும்

## நாளை

மார்கழி 10
சனிக்கிழமை
(25.12.2004)
திதி: சதுர்த்தசி
மாலை. 06.47
நட்சத்திரம் : ரோகினி
மு.ப.09.33
நத்தார் பண்டிகை
சுபநேரம்: 03.27 - 04.57
ராகுகாலம்: 09.27- 10.57
(பழையநேரப்படி)

# பாலர் பகல் விடுதி சிறார்கள் கௌரவிப்பு

தென்மராட்சி, டிசெ.24

தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகள் பாலர் பகல் பராமரிப்பு நிலையங்கள் ஆகியவற்றின் சிறார்களிடையே நடத்தப்பட்ட வலயமட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

கொடிகாமம் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன், தென்மராட்சிக் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் க.சந்திரசேகரா, சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு.ந.பாலச்சந்திரன், தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ-117)

## ஈரம் காயா ஈராண்டுகள்

மண்ணில் 01 10 1982



விண்ணில் 25 12 2002

செல்வி
### சோபியா ஜொய்சி மகேந்திரன்

01-10-1982 - நத்தார் 2002

இருவிழி இமைப்பது போல்
ஈராண்டு கழிந்தது
உறவும் உயிருமாய் உன் எண்ணம் - எம்
ஊனோடு இன்னும் கலந்து கிடக்கிறது எம் உயிரே. நலமா?

அமரர் சோபியா ஜொய்சியின நினைவாக நாளை (25-12-2004) சனிக்கிழமை பி.ப.4.30 மணிக்கு எமது இல்லத்தில் செப வழிபாடு நடைபெறும். அத்தருணம் எம்மோடு இணைந்து பங்கேற்க உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

42, இராஜ வீதி
(சட்ட நாதர்
கோவில் முன்பாக)
கல்வியங்காடு, நல்லூர்.

பத்மா & மகேந்திரன் (பெற்றோர்).
ஜெப் & ரூட், அன்ரன், சசி(சகோதரர்கள்).
0777-286010
0777-667207.

(39994)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனேநம

## 37ஆம் நாள் நினைவுதினமும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 01 - 01 - 1920



உதிர்வு 18 - 11 - 2004

### அமரர் வைத்திலிங்கம் மாணிக்கவாசகர்

அன்புசால் ஐயாவே!
இல்லாளை நீர் இழந்து தவித்தபோதும்,
ஈன்றெடுத்த தாயை நாம் இழந்து துடித்தபோதும்,
பற்றுடன் எமக்குப் பாசமழை பொழிந்தீரே!
இப்போது நாம் பரிதவிக்க எங்கு சென்றீரோ?

இன்று (24.12.2004) வெள்ளிக்கிழமை முற்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மணிமண்டபம் சந்தி,
நவாலி தெற்கு,மானிப்பாய். (39969)(39-11-46-24)

- குடும்பத்தினர்.



## தமிழ்ப் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

### ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன

தகைமைகள்

01. கல்வித்தகைமை: க.பொ.த. உயர்தரத்தில் தமிழ்ப் பாடத்தில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.
02. அகவை: 18 தொடக்கம் 23 வரை

குறிப்பு:

01. வேண்டுகை முடிவு நாள்: **31.12.2004**
02. நேர்காணல் நடைபெறும் நாள்: பின்னர் அறிவிக்கப்படும்.
03. நேர்காணல் நடைபெறும் இடம்: மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
    நிதித்துறை,
    நாகதம்பிரான் வீதி,
    கிளிநொச்சி.
04. நேர்காணலுக்கு வரும்பொழுது கல்வித்தகைமைச் சான்றிதழ் (க.பொ. த.சா.த, க.பொ.த. உ.த.), பிறப்புச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் அடையாள அட்டை ஆகிவற்றையும் அவற்றின் நிழற்படிகளையும் கொண்டுவருக.
05. பயிற்சிக்காலத்தில் மாதந்தோறும் ரூபா 5,000.00 உதவு தொகையாக வழங்கப்படும். தங்குமிடம் வசதி உண்டு.
06. வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:
    பொறுப்பாளர்,
    மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
    நிதித்துறை,
    நாகதம்பிரான் வீதி,
    கிளிநொச்சி.
07. பயிற்சிக்காலம்: ஓர் ஆண்டு
08. பயிற்சியின்பின் ஐந்தாண்டுகள் நிதித்துறையிற் பணியாற்றுதல் வேண்டும்.
09. பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும். பொருத்தமான பணி வழங்கப்பட்டு நிதித்துறைச் சம்பளத்திட்டத்திற் கமைவாகச் சம்பளம் வழங்கப்படும்.
10. தமிழ் மொழியிற் பற்றுடையவராகவும் ஆற்றலுடையவராகவும் தொடர்ந்து கற்கும் விருப்பமுடையவராகவும் அடையாளங் காணப்படுவோர் தமிழிற் சிறப்புக்கல்வியை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நிதித்துறை.

(சி-40003)(39-11-46-24)


## போத்தலில் அடைக்கப்பட்ட பனங்கள் பாவனைக்கு

தென்மராட்சி,டிசெ.24

சாவகச்சேரியில் போத்தலில் அடைக்கப்பட்ட கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் விற்பனைக்கு வரவுள்ளது.

சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சங்கத்தின் கள் போத்தலில் அடைக்கும் தொழில் நிலையம் சாவகச்சேரி, டச்சு வீதியில் அமைக்கப்பட்டுள்ளது. பனங் கள் சீஸன் ஜனவரியில் ஆரம்பித்ததும் தொழில் நிலையத்தில் போத்தலில் அடைக்கப்பட்ட கள் பாவனைக்கு விடப்படுமென சங்கப் பொது முகாமையாளர் வே.கிருஷ்ணன் தெரிவித்தார்.

(ஐ-177)

## கட்டாக்காலி நாய்களை புதைக்க இடம் ஒதுக்கீடு

தென்மராட்சி,டிசெ.24

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அழிக்கப்படும் கட்டாக்காலி நாய்களைச் சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு அருகில் உள்ள கடற்கரையில் புதைக்கப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

நகரப் பகுதியில் அலையும் கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கும்பட்சத்தில் அவற்றினை மயானத்திற்கு அருகில் புதைப்பதற்கு அனுமதிக்குமாறு படை அதிகாரிக்கு நகரசபை செயலாளர் விடுத்த வேண்டுகோளையடுத்து படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## ஒளி விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.24

குருநகர் புனித யாகப்பர் தேவாலய ஒளிவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 6.30 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

ஒளி விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் ஒளி விழா நிகழ்விலேயே நடைபெறவுள்ளதாகப் பங்குத்தந்தை ஆர். எச்.சகாயநாயகம் அடிகளார் தெரிவித்தார்.

(ஐ-202)

✦✦✦

யாழ். பல நோ. கூட்டுறவுச் சங்கம் நடத்தும் ஒளிவிழா நிகழ்வுகள் 29ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குச் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

சங்கத் தலைவர் சூ.சிறில் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தொம்மையப்பு யேசுதாசன் அடிகள் கலந்து அருளுரையாற்றுவார்.

(ஐ-30-17-190)

✦✦✦

கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயத்தில் ஒளிவிழா நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன.

பங்குத் தந்தை அருட்திரு. அன்ரன் மத்தாயஸ் அடிகள் தலைமையில் ஒளி விழா நிகழ்ச்சிகள் நடைபெறும்.

(ஐ-30-190)

✦✦✦

யாழ். மரியன்னை பேராலய ஒளி விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மரியன்னை பேராலய திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளதாகப் பேராலயப் பங்குத் தந்தை அறிவித்துள்ளார்.

(எ)


## கண்ணீர் அஞ்சலி

நியூ சரஸ்வதி விலாஸ், பரமேஸ்வராச் சந்தி, உரிமையாளர் திரு. சி. சுந்தரலிங்கம அவர்களின் துணைவியார் **திருமதி சு.ஸ்ரீகுணபூசணி** அவர்களின் மறைவினால் (27.11.2004) துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், ஜே.பி.ஆர். படமாடம், கல்வியங்காடு உரிமையாளர் திரு. சி. பால்ராஜ் அவர்களின் மாமனார் **திரு.இ.சிவசம்பு** அவர்களின் மறைவினால் (21.11.2004) துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(40008) (24)

- நல்லூர் வணிகர் கழகம்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கதிர்காமு தெய்வானை

எமது திணைக்களத்தின் தலைமைக்காரியாலய பரிசோதகர் **திரு.க.சின்னராசா** அவர்களின் அன்புத் தாயார் அமரர் கதிர்காமு தெய்வானையின் 31ஆம் நாள் நினைவு நாளில் எமது அஞ்சலியைச் செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி ஆணையாளர்கள், உத்தியோகத்தர்கள்,
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்.
கிளிநொச்சி

(39993) (46-11-24)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் நாட்டுப்பற்றாளர்
### கணேசையா விமலேஸ்வரன்

விமல் - ராசு

ஈழத்து மண்ணில் 15-05-1962
டென்மார்க் விண்ணில் 04-01-2004

திதி: திரயோதசி 24-12-2004

மனிதருள் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
மாண்புடன் வாழ்ந்திட்ட நற்பண்பாளரே!
புனித வாழ்வில் புண்ணியங்கள் பல செய்தே
இத்தரணியில் உயிர் நீத்த உத்தமரே!
இனிய உமது குரலும் புன்சிரிப்புத் தவழும் முகமும்
மறக்கமுடியுமோ? மனதை விட்டு அகலுமோ?
ஓராண்டு சென்றாலும் தீராது நம் கவலை
ஆத்மா சாந்திபெற
ஆண்டவனை வேண்டுகிறோம்!

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று (24.12.2004) வெள்ளிக்கிழமை டென்மார்க், வயன் நகரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் அதேவேளை, கொழும்புத்துறை இல்லத்தில் நடைபெறுகின்ற முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நினைவு நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார் உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
*க.ஜெனரட்ணசிங்கம்*
*(சகோதரன் - பாடசாலை வைத்திய அதிகாரி பணிமனை).*

*க.பகீரதன்*
*(மைத்துனர் - உதயன் பணிமனை).*

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி:
**திருமதி ரஞ்சினிதேவி விமலேஸ்வரன்**
**[டென்மார்க்],**
**பிள்ளைகள். திலீகா, ஜெனுசன்**
**[டென்மார்க்],**
**மற்றும் உறவினர்கள்.**

(40005)

இல.7. சென்.மேரிஸ் 2 ஆம் ஒழுங்கை. கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.



## ஓராண்டு ஆயிற்றோ.... ஒளிமுகம் மறைந்து



### அமரர் பாஸ்கரதேவன் ஜெயறஞ்சன்

தோற்றம்: 23.04.1978
மறைவு: 05.01.2004

கனவின் மீதிகளை
செப்பனிடுகிறது வாழ்க்கை
ஓராண்டின் பின்னும்
நனைகிறது விழிகள்
உருகும் வார்த்தைகளுடன்
உன் உறவினை அழைத்து நிற்கிறது
எமது மொழி
காற்றில் கனவில் பூமரங்களில்
நீ நிறைந்து போயிருப்பதாக
ஒரு நம்பிக்கை
ஈரவிழிகள் எப்போதும்
வேண்டி நிற்கிறது
உந்தன் ஒவிய முகத்தை.

கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்

# திருக்குறள் தமிழனின் மூளை; திருவாசகமோ தமிழனின் இதயம்

# இம்மையிலும், மறுமையிலும் இனியவாழ்வுபெற இவற்றை ஓதுவோம்

தமிழ் இலக்கியத்தின் தலைமைக்கு தலையாய எடுத்துக்காட்டாய் விளங்கும் திருவாசகம் தமிழில் எழுந்த பக்தி இலக்கியங்களுள் மிக உன்னத நிலையை வகிக்கின்றது.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலகெலாம் உய்த்து உணர்ந்து ஓதற்கரியவனை எம் உள்ளத்தில் இருத்தி எல்லையற்ற உவகைப் பேற்றினைத் தரும் திருவாசகம் தமிழ் மக்களை மட்டுமல்ல உலகப் பேரறிஞர்களையே தன் பால் ஈர்த்துள்ளது.

**போப்பையர் புகன்ற கருத்து**

தமிழகத்திற்கு கிறிஸ்தவம் பரப்ப வந்து இறுதியில் இன்பத் தமிழுக்கு தம் இதயத்தைப் பறிகொடுத்த தவத்திரு போப்பையர், தமது 80ஆவது அகவையில் 1900 ஆம் ஆண்டு திருவாசகத்தினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தம வாழ்வின் நோக்கை நிறைவுசெய்தார்.

தம் மொழிபெயர்ப்பு நூலின் முன்னுரையில் திருவாசகத்தின் தித்திக்கும் தன்மையினை தெய்வீக அருளினை ஊட்டும் பாங்கினை பின்வருமாறு கூறுகிறார். "One touch of nature makes the whole world kin and no one can read the sage, s verses without profound emotion. Scarcely ever has the longing of the human soul for purity and peace and divine fellowship found worthier expression." இதனின் தமிழாக்கம் (இயற்கையுடன் கொள்ளும் தொடர்பு நானிலம் முழுவதையும் உறவாக்கும். இவ்வடியாரின் பாக்களைப் படிக்கும்போது எவரும் எல்லை மீறிய உணர்ச்சி வயபடாதிருக்க முடியாது. புனிதத் தன்மைக்கும் அமைதிக்கும் தெய்வீக தோழமைக்கும் ஏங்கித் தவிக்கும் மானிட இன்னுயிரின் நிலையை இங்கு தெளிவாக வெளிப்படுத்திக் காட்டியமை போல வேறெங்கும் காண்டல் அரிது.)

**சித்தாந்தத்தின் உள்ளடக்கம்**

இந்நூல் செந்தமிழைத் தழுவி நிற்கும் சித்தாந்தக் கோட்பாட்டின் உள்ளடக்கமாகவும் விளங்குகிறது. முழுமுதற் பொருள்ளாம் சிவனை, மாணிக்கவாசகர் ஓரிடத்தில் "சைவா போற்றி" என்று வாழ்த்தும் வாழ்த்துரையும் இதற்குச் சான்றாகும். இதனாற்றான் திருவாசகத்தில் ஊறித் திளைத்த போப்பையர் தமிழரின் சித்தாந்த செந்நெறியைப் பற்றிக் குறிப்பிடுகையில் "The choicest product of the Dravidian intellect" (திராவிட மூளையின் தெரிந்தெடுத்த படைப்பு என்று வியந்து போற்றினார்).

இவ்வளவு பெருமை தமிழுக்கு உண்டென்பதனால் தான் தமிழை தமிழன் அழியாது காக்க வேண்டும் என்பதை பின்வருமாறு போப்பையர் உள்ளம் உருக இயம்பியுள்ளார். "The speech of a dying people may, perhaps, be allowed do die; but this cannot be said of the Tamil race. Heaven for bidi Dead languages have great uses. Even in their ashes live their wonted fires. De mortius Nil Nisi Bonuml yet in, many ways, the living tongues are better! One cannot tall but flowers may yet bloom, but fruits may yet ripen, on the hardy old trees, let Tamillans cease to be ashamed of their vernacular!"(சாகும் நிலையிலுள்ள ஓர் இனத்தின் மொழிக்கு சா ஏற்படின் தவிர்க்க முடியாத நிலையில் நாம் அதனை ஏற்றே ஆக வேண்டும். ஆனால், தமிழினத்தைப் பொறுத்த வரையில் இந்நிலையை நாம் ஏற்கமுடியாது. இந்நிலை ஏற்படாதிருக்க விண்ணுலகே எமக்கு துணைநிற்க! செத்த மொழிகள் பலவும் பயன் தரும் நிலையில் உள்ளன.அவற்றின் சாம்பலிற் கூட பெருந் தீ ஒளிவிடுகிறது. ஆனால, வாழும் மொழிகள் எமக்குத் தரும் பயனோ எல்லையில் அடங்காது. உறுதி வாய்ந்த பழைய மரங்களில் எத்தகைய மலர்கள் மலர இருக்கின்றன என்றோ, எத்தகைய கனிகள் கனிய இருக்கின்றன என்றோ நாம் எளிதிற் சொல்ல முடியாது. எனவே ஏ தமிழா! உன் மொழியின் பெருமை அறியாது வெட்கித் தலை குனியாது, உன் மொழியின் பெருமை அறிந்து பெருமை கொள்வாயாக!)

**இந்தியக் குடியரசுத் தலைவர் இராதகிருஷ்ணன்**

இந்தியத் துணைக் கண்டத்தின் முன்னாள் குடியரசுத் தலைவராகவும் உலகில் வாழ்ந்த தலைசிறந்த மெய் விளக்க அறிஞராகவும் - தத்துவஞானியாகவும் கொள்ளப்படும் முனைவர் (டாக்டர்) இராதாகிருஷ்ணன் திருவாசகத்தின் திறன் பற்றிக் குறிப்பிடுகையில்:- திருவாசகம் என்னும் நூல் உயிர (ஆன்மா), அறியாமை, ஆசை ஆகிய பந்தங்களில் இருந்து நீங்கி உண்மை ஒளியும் அன்பும் ஆகிய விடுதலை அரண்மனையுள் புகுவதையும் அவ்வுயிரின் அறிவுக் கண் திறப்பதையும் அதனால் விளையும் ஆனந்தத்தையும் பெருமிதத்தையும் அகத்தின் அலைவு, உலைவு, போராட்டம் முதலியவைகளைப் போக்கி இறைவனோடு இதயம் கலக்கும் இன்பத்தையும் அமைதியையும் அழகான பாடல்கள் எடுத்துரைக்கிறது - என்றார்.

**கடகற்பரர் கருத்து**

வடநாட்டிற்கூட காளிதாசனை அரசவைக் கவிஞனாகக் கொண்டிருந்த போஜ மன்னனின் அவைக்களத்திலே வீற்றிருந்த கடகற்பரர் என்ற கவிஞர் 'மணிவாசக தீபிகை' எனும் தம் நூலில் 'திராவிடவேத சாகரம்' என்று திருவாசகத்தை வாழ்த்தியிருப்பதும் இங்கு எணணி இன்புறத்தக்கது.

**சேர் சாள்ஸ் எலியட**

'In no Literature with Which I am acquainted has the individual rellgious life - struggles and dejcctions, its hopes and fears, its confidence and triumph recived a delineation more frank and profound (தனிமனிதன் ஒருவரின் வாழ்வில் ஏற்பட்ட போராட்டங்களை, தோல்விகளை, நம்பிக்கைகளை, அச்சங்களை, மீண்டும் தாம் பெற்ற நமபிக்கையை, வெற்றியை மாணிக்கவாசகர் போல் வேறெவரும் வெளிப்படையாக, ஆழமாகக் கூறவில்லை என்பதை பல இலக்கியங்களை படித்தவன் என்ற முறையில் என்னால் துணிந்து கூறமுடியும்).

**திருவாசகமணி கே.எம்.பாலசுப்பிரமணியம**

'Thiruvasagam is the magnum opus of the saint, and the soul - Melting hymnology of Saivism'. (திருவாசகம் மணிவாசகரின் தலைசிறந்த படைப்பு, அத்தோடு சிவநெறியிற் தோன்றிய உயிரினை உருக்கும் தெய்வீகப் பாடற் தொகுப்பு).

இவ்விதம் உலகத்தவர் உள்ளமெல்லாம் நிறைந்து ஒப்பில்லாத தன்மை பெற்றிருக்கும் இந்நூல், முதலும் முடிவுமிலா உலக முதல்வனை ஆட்கொண்டது வியப்பில்லை. அதனாற்றான், ஏகனாய் அனேகனாய் விளங்கும் எம் இறைவன் மணிவாசகரின் எழுதுவினைஞராக மாறி திருவாதவூரர் செப்பிய திருவாசகத்தை தம் திருக்கையினால் எழுதி எம் பகவதி நீங்கிச் சிவகதியடையச் செய்துள்ளான். இவ்வாறு இறைவன் தொண்டனுக்கு தொண்டனாய் மாறி தொண்டாற்றியமையே.

'எழுதிடும் வேலை பூமேல்
இருப்பவன் இயற்றப் போக்கி
எழுதுதல் இல்லா நூல்சொற்(று)
இனிதமர் தரு மாதேவை
எழுதெழு தெனப்பல் பாச்சொற்(று)
இயைதரப் பெயரும் ஈற்றில்
எழுதிடச் செய்த கோமான்
இணையடி முடிமேல் வைப்பாம்'

என்று மகாவித்துவான் திருச்சிபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளையைக் கனிவுமிகு கற்பனைச் சுவையுடன் பாடத்தூண்டியது போலும் -

**விழிநீர் வழிந்தோடச் செய்யும் நூல்**

இந்த அருட்பேற்றினை திருவாசகம் பெற்றதனாற்றான் வேதத்தை வென்று, வேதம் ஓதும்போது எம் விழிநீர் பெருகாநிற்க தன்னை ஓதும் போது எம் நெஞ்சத்தை நெக்குருகச் செய்து எம் விழிகளில் நீர் பெருவெள்ளமெனப் பெருகச் செய்கிறது. இதனாற்றான் போலும் 'மலம் கெடுத்து மனம் கரைக்கும்' இத்திருவாசகத்திற்கு தம் உள்ளத்தைப் பறிகொடுத்த மறைமலையடிகளார், தமக்கே உரிய விழுமிய தனி நடையில் 'திருவாசகத்தை ஓதியும் உருகாத ஓருயிர் இருக்குமாயின் அதனைக் கல்லென்று கழறுதுமோ அன்றி மண்ணென்று வகுக்குதுமோ இரும்பென்று இயம்பதுமோ, சொன்மின்காள்' என்று இயம்பியுள்ளார்.

ஏறக்குறைய 658 பாடல்களை உள்ளடக்கி 51 பதிகங்களைத் தன்னகத்தே தாங்கியிருக்கும் திருவாசகத்தில் ஏறக்குறைய 3 ஆயிரத்து 300 அடிகள் உள. இந்நூலினால் ஆட்கொள்ளப்பட்டு இதனை எழுத்து எண்ணிப் பயின்ற மறைமலையடிகளார் இந்நூலில் முதன்மையாய் உள்ள சொற்கள் 2 ஆயிரத்து 810 என்று கூறுவதோடு, அவற்றில் 383 வடசொற்கள் என்றும் இயம்பி, விழுக்காடு அடிப்படையில பார்க்கையில் 100 இற்கு 7 அல்லது 8 விழுக்காடு வடசொற்கள் என்றும் நுண்ணறிவுத் திறனோடு ஆராய்ந்து அறைகிறார்.

**உலகியல் வாழ்விற்கும் உகந்தது**

எம் ஆன்ம நாயகனாகிய ஆண்டவனை 'கன்னிகள்' ஆகிய எம் ஆன்மாக்கள் மும்

## மா.க.ஈழவேந்தன்

மலங்களிலிருந்து விடுபடப்பட்டு இறையருள் என்ற இன்பப் பொய்கையில் முழ்கி வீடுபேறு பெறச் செய்வதே இப்பாடல்களின் மெய்விளக்கம் - தத்துவம் எனினும், உலகியல் அடிப்படையில் பார்க்கும்போது, நாட்டின் நலம் நாடி நன்மழை வேண்டும் என நங்கைகள் நற்றமிழில் விடுத்த வேண்டுகோள் சமுதாய நலனின் - கூட்டுறவு வாழ்வில் - நம் நற்றமிழ் வாசகருக்கு இருந்த நாட்டத்தையும் நாம் நன்கு அறியத்தக்கதாய் இருக்கிறது.

**நங்கைகளுக்கு நவிலும் நல்லுரை**

திருவெம்பாவைப் பாடல்களில் 'உன்னடியார்தான் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம் அன்னவரே எம் கணவர் ஆவார் அவர் உகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம் என்ற அடிகளும் மற்றும் 'எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க, எம்மை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க" என்று வரும் அடிகளும் மணிவாசகப் பெருந்தகை மங்கையர் ஊடாக விடுக்கும் வேண்டுகோளானது இன்று நம்மிடையே வாழும் மங்கையர் நல்லவர்க்கும் பொருந்தும் பொருள் பொதிந்த பொன்னுரையாகவன்றோ விளங்குகிறது.

எம் சித்தம் அழகிய சிற்றிடையர்கள் - பூண முலைப் பூவையர்கள் - ஒண்ணித்திலக நகை படைத்த நங்கையர்கள் - வண்ணக்கிளிமொழி பேசும் வனிதையர்கள் - பால் ஊறும் தேன் வாய் படிந்த பாவையர்கள் - மானின் விழி படைத்த மங்கையர்கள் ஆகியவர்களுக்கு மை ஆர் தடங்கண் மடந்தை மணவாளனிடத்து மாசற்ற அன்பு இருக்குமாயின், அம் மங்கை மணவாளனாகிய இறைவனின் பக்தர்களையே நாடி மணம்செய்து நம்மொழியும் நம்நாடும் நலம்பெற - தம் வாழ்வும் வளம்

## ஞானக்கதிர்

பெற நம்பன் அருளை விடுதல் அறியா விருப்புடன் வேண்டி நிற்பார்களாக! நாம் வேண்டத்தக்கவை எவை என்பதை நற்குணர்ந்து நாம் வேண்டியவாறு வேண்டியதை விருப்போடு தரும் விமலனை 'வெந்துயர் தீர்க்கும் வேந்தன் அடி வெல்க' என வாயார வாழ்த்தி நித்தலும் அவன் திருவடி தொழுது நிலமிசை நீடுபுகழுடன் நிறைவாழ்வு வாழ்வோமாக!

**திருவாசகத்தின் உள்ளடக்கம்**

"சிவபுராணமும், போற்றித் திருவகவலும் யாவரும் இனிது ஓதி மகிழ்தற்குரிய வழிபாட்டு நூல்களாக விளங்குகின்றன. திருச்சதகம் மணிவாசகரின் குருபக்தியையும் அல்லது ஞான பக்தி வைராக்கிய நலன்களையும் உணர்த்துகிறது. நீத்தல் விண்ணப்பம் 'இறைவனே! என்னைக் கைவிட்டு விடாதே என அபயக் குரல் இடுகின்றது. திருவெம்பாவை எம்மைத் துயில் எழுப்பி இறையருள் என்றமார் கழி நீரில் மூழ்கச் செய்கிறது. இறைவனைப் பற்றிய பலதிற ஐயவினாக்களுக்கும் தெளிவு தரத்தக்க விடைகளைச் சிறந்த முறையில் வெளியிடுகின்றது. திருச்சாழல், இறைவன் ஆகிய பேரரசனுக்கு உரிய நாடு, மலை, ஆறு, ஊர், கொடி, ஊர்தி மாலை, படைக்கலன் ஆகியவற்றைத் திறந் தெரிந்து பாடுகின்றது திருத்தசாங்கம். திருப்பள்ளி எழுச்சிப் பாடல்கள் இறைவனைத் துயில் எழுப்பி இன்னருள் புரியவேண்டுகின்றன."

**ஆர்.டி.ரணடே (R.D.Ranade)**

இவை அனைத்தையும் உணர்ந்துதான் திருவாசகம் பற்றி இந்தியத் துணைக் கண்டத்தின் வடநாட்டு அறிஞர் ஆர்.டி.ரணடே (R.D. Ranade) பின்வருமாறு கூறுகிறார். உபநிடதத்தை மிஞ்சுகின்ற அளவுக்குத் திருவாசகத்துக்குப் பெருமை உண்டு என்று கூறுகின்றார். (Thiruvasagam makes available to the people of Tamil Nadu the same pathwaay to the godhead even as the Upanishads do. If there is a distinction, it is this the Upanishads state the proposition, the Thiruvasagam fumishes the proof'' (உபநிடதம் போன்றே இறைவனையடைய தமிழக மக்களுக்கு வழிகாட்டுகிறது திருவாசகம், ஆனால், இதிலுள்ள வேறுபாடு என்னவெனில் இறைவன் இயல்பை மட்டுமே உபநிடதம் எடுத்துரைக்கிறது. ஆனால், திருவாசகமோ இறைவன் உண்டென்பதையும் அவனை நாம் உணரமுடியும் என்பதையும் சான்றுகள் கொண்டு நிலைநாட்டுகின்றது.)

திருக்குறள் தமிழனின் மூளை! திருவாசகமோ தமிழனின் இதயம்! அறிவும் உணர்வும் இணைகின்றபோது வாழ்வு மலர்கிறது. தமிழன் வாழ்வு மலர திருக்குறளையும் திருவாசகத்தையும் இடையறாது ஓதி, இம்மையிலும் மறுமையிலும் இனிய வாழ்வு காண்போமாக!. ★

# அதிகாலையில் விழித்திடு; இதனை உணர்த்துவது மார்கழி மாதம்

மேன்மைகொள் சைவநீதி கொண்ட தமிழர் வாழ்வில் மார்கழி மாதமும் பாவை நோன்பும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இவ்விரு பொருளையும் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதப்படுகின்ற கட்டுரை மிக மிக விரியும. அப்படி எழுதிவிட்டாலும் வாசிப்போரின் மனம் ஈர்க்கப்படுமோ என்பது சந்தேகம். இவ்விடயங்களை சிறப்பாக இன்றைய சிறுவர்களும் இளைஞர்களும் அறிந்து ஒழுகி வந்தால் மாபெரும் நன்மை அடைவார்கள் என்பது நுனிபாகும்.

**மார்கழி மாதத்தின் சிறப்பு**

தமிழர் வாழ்வில் சித்திரை மாதம் தொடக்கம் பங்குனி மாதம்வரையும் சிறப்புள்ள மாதங்களாகும். ஆனால், திருமணம், புதுமனை குடி புகுதல் போன்றவைக்கு ஆடிமாதம், புரட்டாதி மாதம், மார்கழிமாதம், மாசி மாதம் போன்ற மாதங்கள் நீக்கப்படினும் நோன்பு முதலியவற்றிற்கும் அவைகளும் சிறந்த மகத்தான மாதங்களாகும்.

அந்த வகையில் மார்கழி மாதமும் சிறந்த தெய்வ மாதமாகும் என்பது துணிபாகும். கிருஷ்ண பகவானும் அருச்சுனனும் பாரதப் போருக்குப் புறப்படுகின்றபோது அர்ச்சுனனின் தேர்ச் சாரதியாக கிருஷ்ணபகவான் தேரைச் செலுத்திக்கொண்டு போர்க்களத்தில் நிறுத்தினார். போர்க்களத்தில் தன்னுடைய உறவினர் முதலாகக் குருமாரும் நிற்பதை அர்ச்சுனன் கண்டான். தன் வில், அம்புகளைக் கீழே வைத்துவிட்டு இவர்களையெல்லாம் கொன்று அரசை ஆழ்வதிலும் பார்க்க நான் மட்டும் இறப்பது மிக நன்றென அர்ச்சுனன், கிருஷ்ண பகவானுக்குக் கூறி கண்ணீர் மழைசொரிந்தான்.

அப்போது அர்ச்சுனன் மனம் தெளிய பகவான் பதினெட்டு அதிகாரம் கொண்ட பகவத்கீதை உபதேசம் செய்கின்றபோது 'மாதங்களில் மார்கழி மாதம் நான்' என அருளியுள்ளார். இதன் காரணம் யாது? இ∴து தேவர்களின் பிரமமுகூர்த்த காலமாகும்.

தேவர்களுக்கு ஒருநாள், மனிதர்களுக்கு ஒரு வருடம் என்பர். தமிழர்களுக்கு மார்கழி மாதம் முடிந்தால் மறுநாள் தை பிறக்கின்றது. மார்கழி முப்பது நாளும் தேவர்களின் பிரம முகூர்த்த காலமாகையால் பூவுலகில் வாழும் சைவர்களும், வைணவர்களும் காலை 3மணியளவில் எழுந்து நீராடி, நீறு, நாமம் பூசி மனைகளைச் சுத்தம் செய்து மார்கழி மாதம் பிறக்கின்றபோதே, மனையின் முன்றிலைச் சுத்தம் செய்து அழகிய கோலம் அரிசிமாவில் இழைப்பர்.

பின்னர் அந்த அரிசிமாக் கோலத்தில், சாணியினாலோ, மஞ்சலினாலோ பிள்ளையார் பிடித்து அறுகம்புல் அதனில் வைத்து வழிபடுவர். மார்கழி முப்பதுநாளும் இவ்வாறு செய்தது வழிபட்டபின்னர், முப்பது பிள்ளையாரையும் தைப்பொங்கல் அன்று அதிகாலையில் முற்றத்தில் ஆகம விதிப்படி பொங்கிப் படைத்துச் சூரியபகவானை வணங்கும் போது மார்கழி முப்பது நாளும் முற்றத்தில் பிடித்து வைத்த பிள்ளையார் முப்பதையும் பொங்கல் படையல் முன்வைத்து ஆகம விதிப்படி வணங்கி குளத்திலோ, ஆற்றிலோ அவற்றை விடுவதால் நாடும, வீடும் மக்களும் சிறந்து விளங்குவார்.

முற்றத்தில் வருடம் முழுவதும் அரிசிமாக் கோலம் இடுவதால் பெருநன்மையுண்டு. இதன் மாக் குறுணிகளை எறும்பு, சிட்டுக்குருவிகள்

## ஸ்ரீ விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி

போன்றவை தமக்கு உணவாக உட்கொள்ளும். இதனைப் பூத யக்ஞம் என்று கூறுவார்கள். ஆனால், அவை இன்று அருகியதால் ஜீவ காருணியமும் குன்றி நாடெங்கும் குழப்பம் உண்டாகிவிட்டது. தெய்வச் செயல்களும் அருகி விட்டன. இதனை விட மார்கழி மாதத்திற்குப் பெரும் சிறப்பைத் தருவது பிள்ளையார் பெருங்கதை விரதமாகும்.

கார்த்திகை மாத கார்த்திகைத் தீபத்தின் மறுநாள் பிள்ளையார் பெருங்கதை ஆரம்பமாகி மார்கழி மாதம் அமாவாசையின் ஆறாம் நாள் இவ்விரதம் பூர்த்தியாகும் போது திருவெம்பாவையும் ஆரம்பமாகின்றது.

**பாவை நோன்பின் மகிமை**

இவ்விரதம் எப்போது? ஏன்? ஆரம்பித்தது என்பதையாரும் அறியாவிடினும், மணிவாசகப் பெருமான் காலத்தில் இவ்விரதம் திருவண்ணாமலை வாழ் பெண்களால் அனுட்டிக்கப்பட்டதை மணிவாசகப் பெருமான் திருவாசத்தில் இருபது பாடல்களால் பக்தி நனிசொட்டச் சொட்டத் தெவிட்டாத் தேன்கள் சொரி தமிழால் பேரின்பம் பயக்கப் பாடியுள்ளார்

இதே போலத் துளசிப் பாத்தியுள் குழந்தையாய் இருந்து, பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்ட கோதை நாச்சியார், பரந்தாமனாகிய நாராயணனைத் திருமணம் செய்யத் தீர்மானித்து மார்கழி முப்பது நாளும் முப்பது பாடலகள் திருப்பாவை தோழியருடன் சேர்ந்து மார்கழி நீராடல் ஆடப் போகும்போது பாடியுள்ளார்.

உண்மையாகவே கன்னிப் பெண்கள் தாம் நினைந்து நினைந்து காதலித்த மணமகனை அடைவதற்கு, மார்கழிமாத திருவெம்பாவை, திருப்பாவை பாடி விரதமிருந்து அடைய நெறிப்படுத்துகின்றது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**திரு. பாலசிங்கம் ஐங்கரன்**
தோற்றம் அவர்கள் மறைவு
09.12.1971 17.12.2002



அமரர்
**திரு. செல்லத்துரை பாலசிங்கம்**
பிரபல வர்த்தகர் (M.B. Siwampillai & Co உரிமையாளர்)
தோற்றம் அவர்கள் மறைவு
08.09.1933 17.12.2002



அமரர்
**திரு. சண்முகம் சிவகுமாரன்**
தோற்றம் அவர்கள் மறைவு
24.02.1963 17.12.2002

அன்பின் சிகரங்களே ஆண்டுகள் இரண்டானாலும் எம் ஈசனாக
விளங்கிய உங்கள் திருமுகத்தை இனி எப்போ காண்போம் என்று
எண்ணி ஏங்கி நிற்கின்றோம். புவியில் உள்ளவரை நிலைத்து நிற்கும்
குறைவின்றி குவலயத்தில் வாழத்துணை நின்ற தெய்வங்களே! நிறைவுடனே
இறைவனருள் பெற ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

*61, பலாலி வீதி. திருநெல்வேலி*

*குடும்பத்தினர்*

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."



தோற்றம் மறைவு
10.01.1921 16.12.2002

கண்ணின் மணியெனக் காத்தவர்கள்
ஆவி கரைந்துவிட தினமும்
எண்ணங்கள் வந்து எமை
ஆட்டி அலைத்து வருத்திடினும்
திண்ணமிது மண்மீது பிறந்தவர்கள்
தீக்கிரையாவ தென்னும்
உண்மையை உணர்ந்து
உள்ளத்தில் ஆறுதல் எய்துகின்றோம்.

அமரர்
## சிவப்பிரகாசம் தங்கம்மா அவர்கள்


*61, பலாலி வீதி. திருநெல்வேலி*

*உறவுகள்*

# சமாதான முயற்சிகளின் எதிர்காலம் என்ன? யாழ்.நகரில் நடந்த விவாதத்தில் காரசாரம்!

**போர்** நிறுத்தத்தின் ஆயுள்பற்றிய சந்தேகங்கள் தீவிரமடைந்துவரும் இவ்வேளையில், பேச்சுகள் மீள ஆரம்பிக்கப்படும் முயற்சிகள் எள்ளளவுகூட முன்னேற்றம் காணாத இந்நிலையில் யாழ்.நகரில் நாவலர் மண்டபத்தில் சமாதான முயற்சிகளின் சாத்தியமான எதிர்காலம் பற்றிய ஒரு பகிரங்கக் கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

மனிதவள மேம்பாட்டு நிலையமான 'விழுது' ஒழுங்குபடுத்தியிருந்த இப்பகிரங்கக் கலந்துரையாடலில் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் இருவர் பிரதான உரைகளை



நிகழ்த்தியிருந்தனர். பேராதனைப் பல்கலைக் கழக அரசியல் விஞ்ஞானத்துறைத் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்கா, இலங்கை அரச சமாதான செயலகத்தின் சட்டப்பிரிவு இயக்குநரும் ஆலோசகரும் அரசியல் யாப்பு விவகார குழுவின் அங்கத்தவருமான கலாநிதி லக்ஸ்மன் மாரசிங்க ஆகிய இருவரும் மிகவும் சர்ச்சைக்குரியதும் வாதப் பிரதிவாதங்களுக்குரியதுமான உரைகளை ஆற்றினர்.

இவர்கள் இருவரது உரைகளுக்கு முன்பாகவே இப்பகிரங்க விவாதத்தில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த 'தமிழ் ஆராய்ச்சி மற்றும் செய்திகள் சர்வதேச வலைப்பின்னலைச்' சேர்ந்த ஆய்வாளர்கள் "இன்றைய அரசியல் நிலைகள் பற்றிய கருத்தரங்குகள்" எனும் தலைப்பிலான பிரசுரமொன்றை பங்குபற்ற வந்திருந்தவர்கள் அனைவருக்கும் விநியோகித்துவிட்டிருந்தனர். அப்பிரசுரத்தை அனைவரும் முதலிலேயே வாசித்துவிட்டனர். அதனால் இவ்வாறான கருத்தரங்குகள், பகிரங்க விவாதங்கள் பற்றிய அபிப்பிராய உருவாக்கம் புதிதாக, பங்குபற்ற வந்தவர்களிடம் ஏற்பட்டுவிட்டது. இவை பற்றிய நிறைந்த அனுபவம்மிக்கவர்கள் பலரும் வந்திருந்தனர். 'பழமும் தின்று கொட்டையும் போட்டவர்கள்...' என்று விவரிக்கப்படக்கூடிய பல்துறைசார் அறிஞர்களும் மண்டபத்தில் குழுமியிருந்தனர்.

அப்பிரசுரத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

"இன்றைய அரசியல் மற்றும் நிலைகள் பற்றிய கருத்தரங்குகள் யாழ்.குடாப் பகுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏ-9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் தென்னிலங்கையிலிருந்து பல்வேறு அமைப்புக்களும் வடக்கு நோக்கிப் படையெடுத்து, போரினால் மனித உரிமைகள் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ்த்தேச மக்களுக்கு மனித உரிமைகள் பற்றியும் சிறுவர் உரிமைகள் பற்றியும் அதிகாரப் பரவலாக்கல், சமஷ்டி ஆட்சிமுறை பற்றியும் பல்வேறு கருத்தரங்குகளை நடத்திவந்தனர். ஆனால், இந்தக் கருத்தரங்குகளின் யதார்த்த நிலை என்னவென்றால், இவை அனைத்தும் ஏமாற்று நடவடிக்கைகளும் திசை திருப்பல்களுமாகும்!"

இலங்கைத் தீவின் மாண்புமிகு ஜனாதிபதியவர்கள் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் செப்ரெம்பர் 21ஆம் திகதி நிகழ்த்திய உரையில் பயங்கரவாதத்தின் மூலவேர்களையும் அதற்கான அரசியல், சமூக பொருளாதார வியாக்கியானங்களையும் தீர்வையும் அணுகி முகங்கொடுத்தலை இரட்டை மடங்கு துரிதப்படுத்த வேண்டிய தேவை பற்றி அழுத்தமாக வலியுறுத்தியிருந்தார். 'தமிழ்ஆராய்ச்சி மற்றும் செய்திகள் சர்வதேச வலைப்பின்னலைச் சேர்நத பிரதிநிதிகள் மண்டபத்தில் வழங்கியிருந்த பிரசுரத்தில் இவ்விடயம் தொடர்பாகவும் பிரஸ்தாபித்திருந்தனர்.

"இங்கு குழுமியிருக்கும் அன்பர்களையும், பேசவந்துள்ளவர்களையும் பகிரங்கமாகக் கேட்கிறோம்! இலங்கையில் முழுமையான அதிகாரப் பரவலாக்கம் இன்றுவரை சாத்தியமற்றதாக இருந்து வருவதற்கும் இலங்கையானது பல இன, பன்மொழி, பல் சமய, பல்கலாசார நாடாக ஆக்கப்பட முடியாதமைக்கும் மாண்புமிகு ஜனாதிபதியவர்கள் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் கூறிய சொற்களில் கூறினால், "பயங்கரவாதப் பிரச்சினைக்கு" மூலகாரணங்கள் எவை என்பதை ஜனாதிபதியவர்களும் சிங்கள தேசக் கட்சிகளும் விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து அறிந்து விட்டார்களா? அதை ஆராய்ந்து அறியவில்லை ஆயின், நிரந்தரத் தீர்வு காணப்போவதாக மாண்புமிகு ஜனாதிபதியவர்கள் கூறுவது பெரும் ஏமாற்றில்லையா....? அவற்றிற்கான மூலகாரணங்களை ஆராய்ந்தறிந்திருந்தால் தயவுசெய்து முதலில் அதனைப் பகிரங்கமாகக் கூறிய பின்னர் கருத்தரங்கினை ஆரம்பியுங்கள்.....!" என்று அந்தப் பிரசுரததில் கேட்கப்பட்டிருந்தது. இப்பிரசுரத்தினை முன்கூட்டியே பகிரங்க விவாதத்தில் பங்குபற்றி வந்திருந்த பெரும்பாலோர் வாசித்துவிட்ட நிலையில் பிரமுகர் உரைகள் ஆரம்பமாகின.

### பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்கா விவரித்த அச்சங்கள்!

அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்கா விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் பற்றி சிங்கள மக்கள் மத்தியிலுள்ள அச்சங்களையும் தயக்கங்களையும் விலாவாரியாக விளக்கிக்கொண்டிருந்தார். பேச்சுகள் தடைப்பட்டுப் போயுள்ளமை, இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளுடன் சம்பந்தப்பட்ட ஒரு விடயமாகும் - என்றார். இருபது வருடங்களுக்கு முன்பு இடம்பெற்ற திம்பு பேச்சுகளில் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட திம்பு கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த, பரந்த அளவிலும் ஆழமாகவும் மிகையான தன்னாட்சி அதிகாரங்களைக் கோரும் யோசனைகளாக அது உள்ளது எனச சுட்டிக்காட்டினார். இந்த யோசனைகள் போன்ற முன்னுதாரணங்களோ மாதிரிகளோ வேறு இல்லை. இது ஒரு தனித்துவமான (Unique) வடிவமாகும் என்றும் அவர் கூறினார்.

"இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் இலங்கை அரசு பற்றிய எந்த வித கரிசனைகளையும் கொள்ளவில்லை. அதில இலங்கைத் தீவு என்று புவியியல் ரீதியான குறிப்பிடுகை மட்டுமே உள்ளது. இலங்கை அரசின் இறைமையைக் கேள்விக்கு உள்ளாக்கும வகையில் கடல் ஆள்புலம் பற்றிய அதிகார விடயங்கள், நீதித்துறை அதிகார விடயங்கள் என்பன அமைந்துள்ளன. நிதிக்கட்டுப்பாடு, நிதிமுகாமைத்துவம் இயற்கை வளங்களின் கட்டப்பாடு ஆகியன தொடர்பான அதிகார விடயங்கள் பற்றிய பகுதிகளும் இலங்கை அரசின் இறைமையை கேள்விக்கு உட்படுத்துகின்றன. இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் 'சட்டவாக்கம், சட்டத்துறை, நிறைவேற்று நிர்வாகத்துறை ஆகியன தொடர்பாக பிரேரிக்கும் அதிகாரங்கள் தனியரசு ஒன்றை ஸ்தாபிக்கும் நோக்கிலான தந்திரமான நகர்வா என்று சிங்கள மக்கள் பிரச்சினை கிளப்புகின்றனர். இவ்வாறான ஒரு பிராந்திய அலகுக்கு அதிகாரங்களை குவித்தல் ஜனநாயக முறைமைக்குப் பாதகமாவதுடன் ஜனநாய

## வேல்நம்பி

கத்தை அழித்துவிடும். போரினால் அழிந்து போயுள்ள வடக்கு - கிழக்கு பிராந்தியத்தின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்தை மேற்கொள்வதற்கு இவ்வளவு அதிகளவான அதிகாரங்கள் ஏன் தேவைப்படுகிறது?

இவ்வாறான கேள்விகளுடனும் அச்சங்களுடனும் சிங்கள மக்கள் காணப்படுகின்றனர் என்று விவரித்தார் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறைத் தலைவர்.

இவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோதே சபையில் பங்குபற்ற வந்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்துறைசார்ந்த பிரமுகர்கள் சிலர் மத்தியிலிருந்து 'புறுபுறுக்கும்' சத்தங்கள் கேட்கத் தொடங்கிவிட்டன. சபையினர் சிலர் அதிருப்தியுற்றிருந்த நிலையிலும் தென்னிலங்கையின் சிங்கள சமூகத்தின் யதார்த்த நிலை என்ன என்பதை அறிவதில் பலர் பொறுமையாக உரையைச் செவிமடுத்துக் கொண்டிருந்தனர்.

"தேசிய பல்கலைக்கழக ஆசிரியர்கள் இணையம் (National Universities 'Teachers' Alliance - NUTA) என்பது பல பெரும்பான்மையின பேராசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் அங்கத்தவர்களாகக் கொண்ட அமைப்பு ஆகும். இந்த அமைப்பு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை முற்றாகவே எதிர்க்கிறது. தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி, ஜாதிக ஹெலஉறுமய போன்ற அமைப்புக்களும் தீவிரமாக எதிர்க்கின்றன. சிரேஷ்ட சிவில் உத்தியோகத்தர்கள் அமைப்பும் எதிர்க்கிறது. ஆனால், ஜே.வி.பி. இரு ஆண்டுகளுக்கு முன்புபோல் அவ்வளவு முரண்டு பிடிப்பதாகத் தெரியவில்லை. லங்கா சமசமாஜக் கட்சி போன்றன இதனடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதை ஆதரிக்கின்றன. தெற்கின் வர்த்தக சமூகத்தினரின் சம்மேளனங்களுக்கும் சில அதிருப்திகள் இருப்பினும் இதனடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க தமது ஆதரவைத் தெரிவிக்கின்றன....." என்றும் தெரிவித்தார் பேராசிரியர் அமரசிங்கா.

### பேராசிரியர் ரஞ்சித் அமரசிங்காவின் மதிப்பீடு என்ன?

சிங்கள சமூகங்களின் நிலைவரங்களைப் படம்பிடித்துக்காட்டிய அமரசிங்கா அவர்கள், ஓர் அரசியல் கற்கையாளன் என்றவகையில் விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் பற்றிய தமது மதிப்பீட்டையும் முன்வைத்தார். 'சமஷ்டி யோசனைகள் அதிகாரப் பகிர்வை (Power Sharing) அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். மத்திய அலகுக்கும் பிராந்திய அலகுக்குமிடையில் அதிகாரம் பகிரப்படவேண்டும். பிராந்தியத்தின் அதிகாரம் குவிக்கபபடுவது அரசின் இறைமையைக் கேள்விக்குள்ளாக்கும், ஜனநாயகத்தைக் குன்றிப்போகச் செய்யும். புலிகளின் யோசனைகள் அதிகாரப் பகிர்வுக்கு வழிவிடவில்லை. வெறுமனே பிராந்தியத்துக்கு அதிகாரத்தைக் குவிக்கச் சொல்வதுடன் அதீத அளவான பிராந்திய தன்னாட்சியைக் கோருகிறது" என்று தனது முடிவுரைப் பகுதிகுள் நுழைந்தார் பேராசிரியர். தொடர்ந்து தமிழ் மொழி பெயர்ப்பை விழுது அமைப்பில் பிரதிநிதி சாந்தி சச்சிதானந்தன் வழங்கினார்.

பேராசிரியர் அமரசிங்காவின் உரை தொடர்பாக சபையிலிருந்து சூடான கேள்விகள் பறந்தன. சபையிலிருந்து பதில் கருத்துக்களும் முன்



வைக்கப்பட்டன. பேச்சுக்களின் ஒரு கட்டத்தில் அமைக்கப்பட்ட 'சிரான்' வடக்கு - கிழக்கு புனர்நிர்மாணம், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் என்பவற்றைக் கவனிப்பதற்கு அதிகாரங்கள் எதுவும் அற்றதாகக் காணப்பட்ட நிலையிலேயே பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டன. விடுதலைப் புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளை முன்வைத்தனர். அதற்கு முந்திய நீண்ட வரலாற்றை பார்த்தால் சிறுபான்மை இனத்தவரின் நலன்களைப் பேணுவதற்கு என்று சட்டமாக்கப்பட்ட எந்த விடயங்களும் அமுலாக்கப்படவில்லை..." என்று சபையிலிருந்து முன்னாள் சிவில் அதிகாரி ஒருவர் சுட்டிக் காட்டினார். தொடர்ந்தும் சபையிலிருந்து பலர் வினாக்களைத் தொடுத்து சர்ச்சித்தனர்.

### மூலகாரணம் தெரியாத கலாநிதி லக்ஸ்மன் மாரசிங்கா!

தொடர்ந்து சமாதான செயலகத்தின் ஆலோசகர் கலாநிதி லக்ஸ்மன் மாரசிங்கா தான் அரச சார்பில் கருத்துக்களை வெளியிடுவதற்காக யாழ்ப்பாணம் வரவில்லை என்றும், தான் தனிப்பட்ட ரீதியில் தனது கருத்துக்களைத் தெரிவிப்பதாகவும் முதலில் கூறினார். இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளிலுள்ள சிங்கள மக்கள் அச்சப்படும் பிரிவுகளை மிக நுணுக்கமாக விளக்கினார் மாரசிங்கா. மத்திக்கும் பிராந்தியத்துக்கும் இடையிலான அதிகாரப் பகிர்வு முறைமைகள் தொடர்பாக சர்வதேச மாதிரிகளை உதாரணப்படுத்தினார். ஒஸ்லோ தீர்மானப்படி பேச்சுக்களை மீள ஆரம்பிக்க புலிகள் விருப்பம் தெரிவித்தால் அரசினால் நாளையே பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியும் என்றும் அவர் கூறினார். இவர் தனது முடிவுரையில் விடு

(12ஆம் பக்கம் பார்க்க)

# ஆஸி.தூதரகத்திலும் 'அந்திராக்ஸ்' பீதி!

கொழும்பு,டிசெ.24

கொழும்பிலுள்ள மேற்குல நாடுகளின் தூதரங்களை அச்சுறுத்திவரும் அந்திராக்ஸ் நச்சுத்துகள் அச்சம் இப்போது கொழும்பிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரகத்தையும் ஆட்டிப்படைக்க ஆரம்பித்துள்ளது.

கடந்த 20 ஆம் திகதி தூதரகத்திற்கு வந்த கடிதமொன்றே இதற்குப் பிரதான காரணமென்பதை தூதரகத்தின் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தினார்.

மேற்படி கடிதம் கிடைத்தவுடன் அதில் சந்தேகம் கொண்ட தூதரக அதிகாரிகள் அதனை பிரித்துப் பார்க்காமல் விசேட கருவியொன்றின் உதவியுடன் உள்ளே என்ன இருக்கிறது என்று ஆராய்ந்துள்ளனர். உள்ளே வெள்ளை நிறத்துகள்கள் இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அந்திராக்ஸ் சம்பந்தமான நிபுணர்கள் உடனடியாக வரவழைக்கப்பட்டனர். அவர்களின் உதவியுடன் இந்தக் கடிதம் மேலதிக ஆய்வுக்காக அரச மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. மேற்படி அந்திராக்ஸ் நிபுணர்களால் இந்தக் கடிதம் இருந்த அறையும் இழுத்துமூடப்பட்டு சீல் வைக்கப்பட்டது.

அதேசமயம் - இது சம்பந்தமான விசாரணைகளை கறுவாக்காட்டுப் பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-க)

# தகவல் தொழில்நுட்ப கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.24

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறிக்கு யாழ்.கல்வி வலய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் தகவல் தொழில்நுட்பத்தினைக் கற்பிக்கும் பட்டதாரி, பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவும் 50 வயதிற்குக் குறைந்தவராகவும் கற்கை நெறியின் பின்னர் கல்விப் புலத்தில் 5 வருடங்கள் சேவையாற்றக் கூடியவராகவும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அதிபரின் சிபார்சுடன் எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நேரடியாக யாழ். வலயக் கல்வி அலுவலகத்துக்கு வருகை தரவேண்டும் என வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (எ-202)

# தகவல் தருபவருக்கு ரூ. 20 லட்சம் சன்மானம்

கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் இந்திய நடிகர் ஷாருக்கான் பங்குபற்றிய களியாட்ட விழாவில் குண்டெறிந்த நபரை கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு 20 லட்சம் ரூபா சன்மானம் வழங்குவதற்கு பொலீஸ் தலைமையகம் முடிவுசெய்துள்ளது.

நேற்றுமுன்தினம் பொலீஸ் தலைமையகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பின்போது பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இத்தகவலை வெளியிட்டார்.

பொலீஸார் மேற்கொண்டுவரும் விசாரணைகளில் எதிர்பார்த்த வகையில் முன்னேற்றங்கள் ஏற்படாத காரணத்தால் பொது மக்களின் உதவியை பொலீஸ் திணைக்களம் நாடியுள்ளது. "குண்டெறிந்தவருக்கு அருகில் பலர் இருந்திருக்கலாம். நிச்சயமாக அந்த நபரை யாராவது ஒருவர் கண்டிருக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. சரியான தகவலை வழங்குபவர்களின் பெயர் விவரங்கள் இரகசியமாகப் பேணப்படும்." எனப் பொலீஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.(எ-க)

# பாதாள உலகக் கும்பல்களுடன் தொடர்பு; வசமாகச் சிக்கிய 22 பொலீஸார்

ஸ்ரீலங்கா பொலீஸார் 22பேருக்கு பாதாள உலகக்கும்பல் மற்றும் போதைவஸ்து கடத்தல்காரர்கள் ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகள் உள்ள விடயம் அம்பலமாகியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் வட்டாரங்கள் அது தொடர்பாகத் தகவல் வெளியிடுகையில், அவர்கள் தொடர்பாக பல ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் தேசிய பொலீஸ் ஆணைக்குழு இவர்களுக்கு எதிராக விரைவில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது என்றும் தெரிவித்தன.

பாதாள உலகக் குமபலிடம் பண உதவி, போக்குவரத்து வசதி, தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்துச்செல்வது உட்படப் பல உதவிகளை இந்தப் பொலீஸார் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளதாக அவை மேலும் தெரிவித்தன.

இவ்வாறு விசாரணை வலையில் வீழ்த்தவர்களில் மேல் மாகாணத்தைச் சேர்ந்த சிரேஷ்ட டி.ஐ.ஜி. ஒருவர், டி.ஐ.ஜிக்கள் இருவர், எஸ்.எஸ்.பிக்கள் மூவர், ஏ.எஸ்.பிக்கள் மூவர் மற்றும ஓ.ஐ.சி ஐவரும் அடங்குவர் என்றும் தெரிவிககப்பட்டது. மேல் நீதிமன்ற நீதிபதி சரத்அம்பேபிட்டிய கொலை மற்றும் கொழும்பில் தொடர்ச்சியாக நடைபெற்ற சில வன்முறைச் சம்பவங்களை அடுத்து பொலீஸ் விசாரணைகள் பல்வேறு துறைகளிலும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)

வர்த்தகப் பெருமக்களே!
ஆசிரியப் பெருந்தகைகளே!
மாணவ மணிகளே!

எங்கள் 46ஆம் வருட நிறைவை முன்னிட்டு

**உன்னதமான மலிவு விற்பனை!**

புத்தகங்களுக்கு 20% தொடக்கம் 70% வரையும், உபகரணங்களுக்கு 10% கழிவும் வழங்கப்படும். இந்தியப் புத்தகங்களுக்கு 3 மடங்கும், 20% கழிவும் வழங்கப்படும்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(C/39699)(42-11-45)


## எங்கள் அன்புத் தெய்வத்தின் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 21 - 01 - 1947



விண்ணில் 17 - 12 - 2002

## அமரர் துரையப்பா தர்மராஜா

திதி: திரயோதசி 24. 12. 2004

அன்பின் இலக்கணமாய்
பண்பின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசமும் பரிவும் காட்டிய எங்கள் தெய்வமே!
நீங்கள் மீளாத்துயில் கொண்டு
ஈராண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் பிரிவால் நாம் இங்கு வாடுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி செ.தர்மராஜா,
'சற்குணபதி',
பூநாறி மரத்தடி,
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில். (39931)(42-11-45)

அன்பு மனைவி மற்றும்
சகோதரர்கள், சகோதரி,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
உற்றார், உறவினர்.

## பெயர் வளைவு அன்பளிப்பு

வரணி,டிசெ.24

வரணி மகாவித்தியாலயத்துக்கு அதன் பழைய மாணவர் ஒருவர் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பெயர்வளைவு ஒன்றையும், இரும்புக்கதவு ஒன்றையும் செய்து அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

லண்டனில் வசிக்கும் வரணி, இயற்றாலையைச் சேர்ந்த சின்னப்பு உதய குமார் என்பவரே இந்த அன்பளிப்பை வழங்கியுள்ளார். (ஐ-170)

## 22ஆவது ஜனன நினைவுதினம்

24-12-2004

மலர்வு 24 - 12 - 1982




உதிர்வு 31 - 08 - 1993

## கனகரத்தினம் ஜெயகாந்

இன்று நீ இருப்பின் எம்மையெல்லாம்
காத்திடும் வாலிபப் பருவக் காவலன்
உன் நினைவுகள் எம்மை விட்டு
ஒருபோதும் அகலாது
உன் நினைவலைகள் எம்மனதில்
எப்போதும் நிழலாடுகின்றன
இறைவன் நாட்டத்தை மாற்றுவார் யாருளர்?

பொ.கனகரத்தினம்,
(கனகு கராஜ்),
கண்டி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (39916)(42-11-45)

அப்பா, அம்மா, அக்கா - தர்மராஜா ஜெயலதா (சுவிஸ்), அண்ணா - சுஜாகர் (சுவிஸ்), தங்கை - சாவிகா, மருமகள் - வர்ணிக்கா, பெரியப்பா, ராஜன் அண்ணா (மொஸ்கோ), அண்ணி, ஜெயந்தி அக்கா, சித்தப்பா, சித்தி, கிஷோர் அண்ணா, தங்கை சோபிகா, மாமா, மாமிமார், மச்சாள், மச்சாண்மார் மற்றும் நண்பர்கள், உற்றார், உறவினர்கள்.

## பால்மா விலைகள் ஜனவரி 7 இல் தீர்மானிக்கப்படும்

பால்மா விலைகளை அதிகரிப்பதா, இல்லையா என்பது பற்றிய இறுதித் தீர்மானம் ஜனவரி ஏழாம் திகதியே மேற்கொள்ளப்படுமென்று பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் எம்.ஐ.எம். ரூஷின் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப பால்மா விலைகளும் அதிகரிக்கப்பட வேண்டுமெனப் பால்மா உற்பத்தி நிறுவனங்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வந்தன. இதனையடுத்து நேற்றுமுன்தினம் காலை வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தலைமையில் வர்த்தக அமைச்சில் விசேட கலந்துரையாடல் நடந்தது.

பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர்சபை உறுப்பினர்கள் மற்றும் பால்மா உற்பத்தியில் ஈடுபடும் 13 நிறுவனங்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர். பால்மா விலை அதிகரிப்பு தொடர்பில் இங்கு நீண்டநேரம் ஆராயப்பட்டது. அதே சமயம் பெருநாள் மற்றும் புதுவருடகாலத்தில் உடனடி விலை அதிகரிப்பை மேற்கொள்வது ம்க்களைப் பாதிப்படையச் செய்யுமென்று ஜெயராஜ் இங்கு சுட்டிக்காட்டினார். (க-8)

## 1,500 கோடி ரூபா செலவில் மின்சார உற்பத்தி நிலையம்

இந்திய மின்சாரக் கூட்டுத்தாபனம் உதவுகிறது

கொழும்பு,டிசெ.24

இலங்கையில் 1,500 கோடி ரூபா செலவில் 300 மெகாவோற் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு இந்திய தேசிய அனல் மின்சாரக் கூட்டுத்தாபனம் முன்வந்துள்ளது.

இலங்கை மின்சாரசபை, பாரத் எலக்ட்ரிக்கல் நிறுவனம் என்பன இணைந்து இந்த மின உற்பத்தி நிலையத்தை அமைக்கவுள்ளன.

இந்தியாவின் தேசிய அனல் மின்சாரக் கூட்டுத்தாபனம் இது சம்பந்தமான பிரேரணையை இலங்கை அரசுக்கும், இலங்கை மின்சார சபைக்கும் கடந்த வாரம் சமர்ப்பித்திருந்தது.

இது தொடர்பாக இந்திய அனல் மின்சாரக் கூட்டுத்தாபனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கையில்:-

கொழும்பிலிருந்து 80 மைல் தூரத்தில் இந்நிலையம் அமைக்கப்படும். இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டு நடவடிக்கையின் அடிப படையில் இந்த உற்பத்தி நிலையம் அமைக்கப்படும்.

இதற்கு எரிபொருளாக பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து நிலக்கரி பெற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-க)

## கைவினைப் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,டிசெ.24

தென்மராட்சிப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி மகளிர் பிரிவின் 2005 ஆம் ஆண்டுக்கான கைவினைப் பயிற்சி வகுப்புகள் ஜனவரி மூன்றாம திகதி ஆரம்பமாகவுள்ளன.

மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் கைதடி தெற்கு கிராமிய அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

மனைப்பொருளியல். தையல், சிகை அலங்காரம், கேக் ஐசிங் போன்ற பயிற்சிகள் நடத்தப்படுமெனப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப பிரிவினர் தெரிவித்தனர். (எ-117)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,டிசெ.24

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் "சித்தம் அழகியார்" எனும் தலைப்பில் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் சொற்பொழிவாற்றவுள்ளார். (எ-13)


2005 **Mega** Intelligent Test
கணினி கற்கைநெறிகளுக்கான
மெகா போட்டிப் பரீட்சை

1. Diploma in Computer Software Engineering — 5 months — DCSE
2. Advanced Diploma in Web Multimedia — ADWM
3. Professional Diploma in e-Developer — PED
4. Diploma in Office Automation with Accounting — DOA
5. Advanced Diploma in Hardware & Networking — ADHN
6. Professional Diploma in Graphic Design — PDGD

**ASIAN COMPUTERS வழங்கும்**

கணினி கற்கைநெறிகளுக்கான போட்டிப் பரீட்சை

கல்வி ஆண்டு 2005

Registered with Ministry of Tertiary & Vocational Education

வெல்லுங்கள் 75% புலமைப்பரிசில்




யாருக்கு ?
அனைவருக்கும் கணினிக்ல்வி என்ற நோக்கில், வயது வித்தியாசமின்றி கணினித்துறையில் ஆர்வமுடைய அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறலாம்.

பரீட்சைகள் பற்றிய விபரம்
பரீட்சைகள் G. C. E. (O/L) பாடத்திட்டம் மற்றும் பொது அறிவு சார்ந்ததாக அமையும். இப்போட்டிப் பரீட்சைகள் அரச பாடசாலைகளில் மட்டுமே நடைபெறும்.

மேலதிக விபரங்கள் - இலவச அனுமதிகள்
இலவச அனுமதிகளையும், விபரங்களையும் யாழ்நகர், சுன்னாகம், நெல்லியடி மற்றும் கிளிநொச்சியில் (கணினியியல் கல்லூரி) அமைந்துள்ள ASIAN கணினி பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**ASIAN COMPUTER SYSTEMS**

| யாழ்ப்பாணம் | சுன்னாகம் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, & 021-222 5677 | 108,K.K.S.வீதி, (Jet Motors மேல் மாடியில்) சுன்னாகம். Tel : 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. Tel : 077-3122198 | கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி. |

# மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல்...!



இயற்கையும் பலமுறை மனிதர்களுக்கு பாடம் நடத்துவதுடண்டு. மரத்தால் விழுந்த வனை மாடேறி மிதித்தது போன்ற அனுபவம் - இலங்கைக்கு குறிப்பாக வடக்கு - கிழக்கு மக்களுக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு.

இங்கு மரத்தால் விழுந்தது என்பது யுத் தத்தில் சிக்குண்டு நாசமாகிப்போன நகரங்க ளையும் மாடேறி மிதித்தது என்பது மழையி னால் ஏற்பட்ட பெரும்வெள்ளத்தினையும் குறிக் கின்றது. கடந்த நவம்பர் மாதம் முதல் தனது பலத்தை வன்னிப் பெருநிலப்பரப்பில் - குறிப் பாகக் கிளிநொச்சியில் காட்டியிருக்கிறது மழை.

யுத்தத்தில் சிதையுண்ட நகரம் தன்னைப் புதுப்பித்து வரும் இவ்வேளையில் மீண்டும் புனர்வாழ்வு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. பொதுவாக நவம்பர் மாதம் மழைக்குரிய காலம் தான். அதை எதிர்கொள்ளத் தம்மைத் தயார் படுத்தினர் என்பதும் உண்மைதான். இருப் பினும் எதிர்ப்பார்ப்புக்கு மீறிய வெள்ளம் மக் களை நிலைகுலையத்தான் செய்திருந்தது.

கிளிநொச்சியில் கிட்டத்தட்ட 9238 குடும் பங்களை மீண்டும் பழைய இடம்பெயர்வு வாழ் வுக்கு ஆளாக்கியிருக்கிறது வெள்ளம். தற் போது வெள்ளம் சற்று வற்றிவருவது மனதுக்கு ஆறுதலைத் தருகின்றது. இருப்பினும் அது ஏற்படுத்திய அழிவுகள் ஆறுவதற்கு நாளாகும் என்றுதான் கூறவேண்டும்.

கிளிநொச்சி விவசாயத்தை முதன்மைப் படுத்திய மாவட்டமாகும். மண்ணை நம்பி வயல் விதைத்து மழையை நம்பி காத்திருந்த விவசாயிகளின் தலையில் இடிதான் விழுந்து விட்டது.

பெருமழை காரணமாகப் பெருமளவு வயல் கள் மற்றும் மரக்கறிப் பயிர்கள் நாசமாகியுள் ளன. முதற்கட்ட மழையின்போது அழிவடைந்தது விவசாயிகள் மீளவும் விதைத்தனர். பிறகும் பெய்த மழை மீளவும் அழிவினை ஏற்படுத் தியதால் பாரிய நஷ்டம் ஏற்பட்டது.

இம்முறை பகுதிபகுதியாகப் பெய்த பெரு மழையினால் இரணைமடுக்குளம் நான்கு தட வைகள் திறக்கப்பட்டது. இரணைமடுக்குளத் தின் நீரை வெளியேற்ற கதவுகள் திறக்கப் படும்போது அந்த நீர் செல்லும் தாழ்வான பகுதி மக்கள் பொதுவாக வெள்ள அபாயத் தினை எதிர்நோக்குவர்.

ஆனால், பெண்களின் மனவெளிப்பாட் டிற்கு துணிந்து செயற்பட முற்படுகையில் அடிப்படையில் பயம் அவர்களை சூழ்ந்து விடுகின்றது. இங்கு மிகமுக்கியமாக வீட்டை விட்டு வெளியில் பெண் ஒருத்தி இறக்கும் போது மனக்கஷ்டங்களை அனுபவிக்காத நிமிடம் இல்லையென்றே கூறலாம். அதற்கு இன்றைய மேல்நாட்டு நாகரிகம், சினிமாவின் கற்பித்தல், தமிழ் சமூக இளைஞர்களையும் ஆட்கொள்கின்றமை காரணமாகும். அவர் களினாலான பாலியல் ரீதியான வார்த்தைப் பிரயோகங்களும், செயற்பாடுகளும் பெண்கள் வதியில் நடமாடுவதற்கு பெரும் பிரச்சினையான விடயங்களாக உள்ளன. தட்டிக்கேட்க ஒருததி முற்படுகையில்,

"நாங்கள் ஆம்பிளையள் என்னவும் செய் வம்"

இதுதான் இன்று பாடசாலை மாணவன் தொடக்கம் வயதானவர்கள் வரையும் உள்ள பிரச்சினை. இந்த நிலைமைகள் மாற வேண்டும். ஒவ்வொரு மனங்களிலும் நல்ல சிநதனைகள் முளை கொள்ளவேண்டும். இதற்கு ஒட்டுமொத்த இளைஞர்களும் உதவ வேண்டும். நலிந்து கொண்டு போகும் சமூகத்தை நல்ல நல்ல சிந்தனை உள்ள சமூகமாக உருவாக்க அனைவருமே கவனம் கொள்ளவேண்டும். இந்த கவனத்தில் எல்லோரும் சேர்ந்து பெண்கள் துணிவுள்ளவர்களாக வளர உதவ வேண்டும். அப்போது தான் சிறந்த மானுடம் உள்ள சமூகமாக வாழ முடியும். ☆

## என் ஜீவன் நீயம்மா!!!



கடல் நுரைப்பூக்கள் போல்
மென்மையானவள்
கடல் முத்துக்கள் பல சேர்ந்து
பெண்மையானவள் – அவள்
கருப்பைச் சிற்பிக்குள் முத்தான
என்னை உருவாக்கியவள்

சஞ்சீவன் எனப் பெயர் சூட்டி
உன் ஜீவனில் பாதி எனக்குத் தந்த
என் ஜீவன் நீயம்மா
மூன்று தேவிகளும்
மொத்தமாய் சேர்ந்த
கௌரிதேவி நீயம்மா.....

உன் தொப்புள் கொடியிலே
நான் வாழ்ந்தேன் அன்று
என் இரத்த நாடியிலே
நீ வாழ்கிறாய் இன்று
உன்மடியிலே என் உடல் சாய்க்க
இடம் வேண்டுமம்மா இனி......

என் நாளங்கள் வெடிக்கிறது
உன்னைப் பிரிந்த நாள்களை எண்ணி
என் கண்கள் கரைகின்றது
உன் பூ முகம் காணாத காரணத்தால்

நாள்கள் தேய்கிறது – கூடவே
என் இளமையும் தேய்கிறது – ஆனால்
வயது மட்டும் ஏணியில் பாய்கிறது
உன் மடியில் தலைசாய்க்கும்
சந்தர்ப்பமும் காணாமல் மறைகிறது

உன்னுடன் கோபித்த நேரத்தில்
கூடவே இருந்தது உன் நினைவுதான்
உன்னால் சாதித்த நேரத்திலும்
உள்ளத்தில் உறங்கியது உன்
உணர்வுகள்தான்

உன் அன்பின் வேர்கள்
என் கல்மனப்பாறைகளை
உடைத்தெறிந்து
வென்றிக்கொள்கிறது
அது என்னிலும் அன்பை
பதிவைத்துச் செல்கிறது

**து.சஞ்சீவன்.**

## பெண்களின் உரிமைகள்

இலங்கைப் பெண்கள் பற்றி பிரகடனம் இலங்கைப் பெண்களுக்கு உறுதிப்படுத்தப்பட வேண்டிய உரிமைகளையும், சலுகைகளை யும் காட்டி நிற்கின்ற அரச அறிக்கையாக இருப்பதோடு, ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கு எதிரான எல்லா வேற்றுமைகளையும் இல்லா தொழிப்பதைப் பற்றிய சீடோ உடன்படிக்கை யினை ஒட்டி வரையப்பட்டுள்ளது. இப்பிரகட னம் 1993ஆம் ஆண்டு அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பிரசித்தப்படுத்தப்பட்டது.

இலங்கை அரசினால் உறுதிப்படுவதாகப் பகன்று இப்பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள உறுதியுரையின் சில விடயங்கள் திலகம் பகுதியில் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டிருந்தது. அவற்றின் தொடர்ச்சி பின்வருமாறு:-

**சுகாதார ரீதியான பாதுகாப்புக்கும் மற்றும் போசனை பெற்றுக்கொள்வதற்குரிய உரிமைகள்**

✲ சுகாதாரப் பாதுகாப்புத் தகவல், போச னைக் கல்வி, நோய் நிவாரணம் மற்றும் வைத்திய சிகிச்சை சம்பந்தமாக தேவையான தகவல்களையும் அறிவுறுத்தல்களையும் பெற் றுக்கொள்ளக்கூடிய உரிமை.

✲ பால்வினை நோய்கள் சம்பந்தமான தகவற் கல்வியையும், அறிவூட்டல்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமைகள்.

✲ பெண்களுடைய உள, உடல் சுகாதாரத் தைப் பேணுவதற்கான வேலைத் திட்டங் களை ஒழுங்குபடுத்துதல்

✲ தாய்மை மற்றும் மகப்பேற்றின் பின் னருள்ள காலப்பகுதி ஆகியவை சம்பந்தமாக தேவைப்படுகின்ற சுகாதாரப் பாதுகாப்புச் சேவை கள் இலவசமாக வழங்கல்.

✲ குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான தீர்மானிக்கக் கூடிய உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

**சமூக ரீதியாக வேற்றுமைப்படுத்தலிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குரிய உரிமை**

✲ ஆண், பெண் சமூக நிலையினை அடிப் படையாகக் கொண்ட ஒரு தலைப்பட்சமான மனப் பாங்கை ஏற்றுக்கொள்வதை இல்லாது ஒழிப்ப தற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

✲ ஊடகங்கள் வாயிலாக பெண்மைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையில் நடைபெறும் அனைத்துப் பிரசாரங்களையும் நிறுத்துவதற் குரிய உரிமை.

✲ பெண்களையும் சிறார்களையும் கீழ்த் தரமான வெளியீடுகளுக்காகப் பயன்படுத்து வதை நிறுத்துதல்.

✲ கைம்பெண்கள், விவாகரத்து பெற்றுள்ள பெண்கள், தனிமையாக வாழும் தாய்மார்கள், பெண்கள் ஆகியோர்களை சமூக எதிர்ப்பிலி ருந்து விடுவித்து இவர்களுடைய வாழ்விற் குரிய உரிமைகளை உறுதிப்படுத்துதல்.

✲ சமூகத்தின் பிரதான நீரோட்டத்தின் எல்லா நடவடிக்கைகளிலும் பெண்களுடைய பங்களிப்பை உறுதி செய்யக்கூடிய முன்னேற்ற கரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

✲ பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் பாலியல் துன்புறுத்தல்களையும் மற்றும் எல்லா விதமான தொல்லைகளையும் இல்லாதொழிப் பதற்கும் அவைகளிலிருந்து விடுபடுவதற்கு முள்ள உரிமை.

✲ பெண்கள் பிரகடனத்தை நடைமுறைப் படுத்தக் கூடிய செயல்முறை.

## சந்தியாவின் கடிதங்கள்



**பிரியமுள்ள பிரியாவிற்கு,**

சென்ற தடவை நான் உன்னை நேரில் சந்தித்தபோது உன் மனஆதங்கத்தைக் கூறியிருந்தாய் என்னால் எதையுமே உறுதியாக நின்று செய்து வெற்றிபேற முடிய வில்லையே என்று கவலைப்பட்டாய்....

அன்று என்னால் உனக்கு ஆலோசனைகளைக் கூறமுடியவில்லை. வேறு ஓர் இடத்திற்குச் செல்லவேண்டிய தேவையிருந்ததால் அன்று எதுவும் கூறாததற்கு என்னை மன்னித்துவிடு.

"நம்மால் முடியும் என்ற எண்ணம் மனத்தில் தோன்றும்போது அதைச் செய்துமுடிக்கும் தார்மீக வலிமை உடலில் பிறக்கின்றது. திரும்பத் திரும்ப எண்ணும் ஓர் எண்ணம் நம்பிக்கையாகி செயற்படத் தூண்டுகின்றது" என்கிறார் ரால்ப் வால் டோடிரைன் என்கின்ற தத்துவஞானி.

நாம் ஒரு செயலைச் செய்யவேண்டுமாயின் அதுபற்றி எண்ணம் தோன்றி அதைச் செய்து முடிப்போம் என்ற நம்பிக்கை மலர வேண்டும். அந்த நம்பிக்கை தான் அதன் செயலை வெற்றிபெறச் செய்கின்றது.

உதாரணமாக நான் ஒரு வீடு கட்டவேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். அந்த ஆசைதான் முதலில் எனக்குள் தோன்றுகின்றது. பின்னர் அந்த வீடு கட்டுவதற்கு நம்மிடம் பணம் உள்ளதா? இல்லாவிட்டால் எப்படிப் பணத்தைச் சேர்க்கலாம்? இது என்னால் கட்டிமுடிக்கக் கூடியதா? என்ற கேள்விகளும் ஆதங்கங்களும் ஏற்படும் சில நேரங்களில் சந்தேகம் கூட ஏற்படும்.

ஆனால், எப்படிக் கஷ்டப்பட்டாலும் ஒரு வீட்டைக் கட்டுவோம் என்று தீர்மானித் தால் நிச்சயம் அதை எம்மால் கட்டிமுடிக்க முடியும்.

மலை உச்சிகளில் வீடுகளைக் கட்டுபவர்கள் மலையிலிருந்து இறங்குவதற்குச் சுலப மான வழிகளைக் கண்டுபிடிப்பதற்காகத் தமது மாடுகளை அவிழ்த்து விடுவார்கள். அம் மாடுகள் நாளாந்தம் மேய்ச்சலின்போது சுலபமான வழிகளைக் கண்டு பிடித்துச் செல்லுமாம்.

இதேபோலவே மனித வாழ்க்கையில் நாம் வெற்றிகளைக் காண்பதற்கு சுலப மான வழிகளைத் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும்.

மலை நாட்டினர் "நாம் பயணிப்பதில் சிரமம் ஏற்படும்" என்று எண்ணியிருந்தால் மலைநாட்டின் வளங்களை நாம் பெற்றிருக்கவே முடியாது. கஷ்ரங்கள், துன்பங்கள் என்பவற்றுக்கிடையிலும் நாம் முன்னேறும் வழிகளைத் தேடிப்பிடிக்கவேண்டும்.

இவற்றுக்கெல்லாம் உந்து சக்தியாக இருப்பது நம்பிக்கையே. நம்பிக்கையே நம்மை வாழவைக்கும்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண்மணி நோய்வாய்ப்பட்டு இன்னும் 3மாதங்களே உயிர் வாழ்வாள் என டாக்டர்களால் கெடுவைக்கப்பட்டிருந்தாள். கணவனை இழந்த அவளுக்குத் திருமணமாகாத 4 பெண்பிள்ளைகள் இருந்தனர்.

அவள் தன் பெண்களுக்குத் திருமணமாகும் வரை தான் உயிருடன் வாழ்வேன் என்று நம்பினாள். உண்மையில் அவளது 3ஆவது பெண்ணின் திருமணத்தின் பின்பே - 5 வருடங்களின் பின்பே - அவள் இறந்தாள். நம்பிக்கையே அவளை இத் தனை வருடங்கள் உயிர் வாழவைத்தன.

எனவே, எந்த ஒரு விடயத்தையும் நாம் வெற்றிகொள்ள வேண்டுமானால் வெற்றி நிச்சயம் என்று நம்பிக்கை கொள்ளவேண்டும். அந்த நம்பிக்கையிலிருந்து முயற்சி தொடரவேண்டும்.

எனவே, பிரியா, தோல்வியைக் கண்டு சோர்ந்துவிடாது- நம்பிக்கையுடன் உன் வெற்றிக்கான வழிகளைத் தேடு. அதுவே உன்னை வளப்படுத்தும்.

24.12.2004

பிரியமுடன் சந்தியா.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 27 – 05 – 1941

மறைவு 24 – 11 – 2004

# அமரர் அப்புத்துரை பத்மநாதன்

அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மறைந்த
உங்கள் ஆத்ம சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்திகேட்டு உடன்வந்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (24.12.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

காட்டுத்தரை வளவு, மல்லாகம். (39929) (42-19-45-24) - குடும்பத்தினர்.

## நெஞ்சில் நீங்கா நினைவுகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14 – 07 – 1946

உதிர்வு 21 – 12 – 2003

# சரவணமுத்து சிவானந்தம்

(குஞ்சுமணி)

திதி: திரயோதசி (24.12.2004)

எங்கள் உணர்வுக்குள் உறைந்திருக்கும்
குலவிளக்கே!
ஓர் ஆண்டென்ன எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் - நாம் எங்குதான்
நின்றாலும் எவருடன் சேர்ந்தாலும் - உம்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது!
உம் ஆத்மா சாந்தியடைய
தும்பிக்கையான் பாதம் பணிகின்றோம்!

தற்காலிக முகவரி:
ஊரியான் வீதி,
கைதடி மேற்கு. (39968)(42-19-45-24)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணக மலர்வு 10 - 05 - 1979

விண்ணக விரைவு 24 - 12 - 2000

# அமரர் கனகலிங்கம் சுரேஸ்

(கண்ணன்)

வல்லதவப் பேற்றினாலே வந்துதித்த
வடிவழகன் சுரேஸ்கண்ணா எங்கு சென்றாய்?
சின்னக் குழந்தையாய் மடியில் வைத்தே
சீராட்டிப் பாராட்டி வளர்த்தோம் ஐயா!
மின்னல் போல் மறைந்தனையோ சுரேஸ்கண்ணா – உன்
மிளிர் சிரிப்பை மேதினியில் இனிக்காண்போமோ?
உன் பிரிவால் துடிக்கின்றோம் கதறுகின்றோம்
உன் ஆத்மா சிவபதத்தில் பெறுக சாந்தி!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மஞ்சத்தடி,
இணுவில். (39990) (24-19-45) - குடும்பத்தினர்.

## உலர் உணவு சேகரிப்பு

தென்மராட்சி,டிசெ.24

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்க சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் பொருள்கள் சேகரிக்கும் பணியினை ஆரம்பித்துள்ளனர்.

சங்கத்தின் கிளைக் கடைகளில் இதற்கான மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்க விரும்பும் பொதுமக்கள் தத்தமது பிரிவுக் கிளைகளில் பொருள்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

புத்தளம்,டிசெ.24

புத்தளம் நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். தனிப்பட்ட காரணங்களுக்காகவே இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலீஸார் நம்புகின்றனர்.

கல்கட்டாஸ் என்ற துப்பாக்கியினால் சுடப்பட்டு அவர் பலியானார். சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் புத்தளம் நகரிலுள்ள இஜ்திமா மைதானத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

எஸ்.ஜே.எம்.அஜ்வாத் என்னும் 38 வயதுடைய 4 பிள்ளைகளின் தகப்பனே கொலையுண்டவராவார்.

இவர்மீது ஐந்து துப்பாக்கி ரவைகள் பாய்ந்துள்ளன. மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது இவர் சுடப்பட்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கொலையாளிகள் தலைமறைவாகியுள்ளனர். புத்தளம் பொலீஸார் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (க-8)

## தென்மராட்சியில் விபத்துகள்; ஒருவருடத்தில் 7 பேர் பலி

தென்மராட்சி,டிசெ.24

தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வருடம் இடம்பெற்ற வீதி விபத்துகளில் ஏழு (7) பேர் பலியாகியுள்ளனர் - 50இற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலீஸ் நிலையப் புள்ளி விவரங்கள்மூலம் மேற்படி விவரம் தெரியவந்துள்ளது. (எ-117)

## வீடமைப்புக் கடன் விண்ணப்பங்கள்

தென்மராட்சி,டிசெ.24

யாழ். தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் 2005ஆம் ஆண்டுக்கான வீடமைப்புக் கடன் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் பிரதி புதன்கிழமைகளில் வீடமைப்பு அபிவிருத்தி அலுவலரிடம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடமைப்புக் கடனாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்படுமெனவும், 50 வயதுக்கு உட்பட்ட இரு அரச ஊழியரின் பிணையுடன் விண்ணப்பிக்கலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-117)

## நீர்வேலிப் பகுதியில் திருடர் தொல்லை

அரியாலை,டிசெ.24

நீர்வேலிப் பகுதியில் திருடர்களின் கைவரிசை இரவு நேரங்களில் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரவு நேரங்களில் மக்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் சமயம் பார்த்துத் திருடர் கோஷ்டியினர் வீட்டு நாய்களுக்கு மயக்க மருந்தை விசிறிவிட்டு எதுவித சத்தம்சந்தடி இன்றி மிகத் தந்திரமாகச் சூறையாடும் பணியில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருடர்களின் இந்தப் புதுவகையான திருட்டுச் சம்பவத்தால் மக்கள் பீதியுற்றுக் காணப்படுகின்றனர். (எ-17)

## முன்பள்ளிக் கட்டடம் புனரமைப்பு

தென்மராட்சி,டிசெ.24

யுத்தத்தினால் சேதமடைந்த கல்வயல் கலைமகள் முன்பள்ளி மூன்று லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கென யாழ். ஓ.ஐ.எம்.என்னும் நிறுவனம் நிதி வழங்கியுள்ளது.

முன்பள்ளிக் கட்டடம், சிறுவர் விளையாட்டு முற்றம் ஆகியவை இந்நிதியைப் பயன்படுத்தப் புனரமைக்கப்படும்.

கட்டடத்திற்கான அடிக்கல் அண்மையில் கல்வயல் சண்முகானந்தா வித்தியாலய அதிபர் இ.இரவீந்திரனால் நடுகை செய்யப்பட்டது.(எ-117)

## கிராம அபிவிருத்தி சம்மேளனம் அங்குரார்ப்பணம்

தென்மராட்சி,டிசெ.24

பளைப் பிரதேச கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

பளை உதவி அரச அதிபர் என்.சிவசிறி தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட கிராமிய அபிவிருத்தி அலுவலர், பளைப் பிரதேச கிராமிய அபிவிருத்தி அலுவலர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சம்மேளனத்திற்கான நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக சு.தவரட்ணசிங்கமும், செயலாளராக சு.திரவியரத்தினமும், பொருளாளராக வே.கந்தசாமியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (எ-117)

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned posts:

### FACULTY OF ARTS

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Linguistics/ Education (Specialized in Applied Science).
Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Art Design / Find Art's (Specialised in History of Art and Art Criticism)
Senior Lecturer Grade II (On Contract) in English Literature.
Assistant Lecturer (On Contract) in Anthropology/ Art and Design/Christian Civilization / Dance (Bharathanatiyam/Vocal/Miruthangam) Music (Vocal/Veena/ Violin/ Miruthangam/Pannisai) / Drama & Theatre Arts / Economics / Fine Arts / Geography / Hindu Civilization / Hindu Philosophy / Political Seience / Psychology / Philosophy / Sociology / Tamil / Linguistics / Sanskrit / Planning (Specialized in Social Planning or in Sociology).
Tutor in Geography / History / Archaeology
Instructor (On Contract) in Music (Vocal / Veena / Violin / Miruthangam / Pannisai) / Dance (Bharathanatiyam / Vocal / Miruthangam) Art and Design.
Visiting Lecturer in * English Literature / **French / Home Economics / Art & Design
*Preferable fields; Sri Lankan Writers / Literary women / Contemporary South Asian Literature / Women Novelist / English translation of Modern Literary works.
**Preference will be given to those who have competence in Teching French.
Visiting Instructor in English (English Language Teaching Centre) / Art and Design / Music.

### Department of law

Senior Lecturer Grade I (On Contract) / Senior Lecturer Grade II (On Contract) / Assistant Lecturer (On Contract) in Law.
Visiting Lecturer in Law.

### FACULTY OF AGRICULTURE

Assistant Lecture (On Contract) / Demonstrator (On Contract) in Agronomy / Agricultural Biology / Agricultural Chemistry / Animal Science / Agricultural Economics / Agricultural Engineering.

### FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE

Assistant Lecturer (On Contract) in Business Administration / Commerce Visiting Lecturer in Law (Civil, Industrial, Commercial)

| Post: | Salary |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs. 23,650-8x525-32,890/p.m. |
| Senior Lecturer Grade II | Rs.20,160-5x525-22,785/-p.m. |
| Lecturer (Probationary) | Rs. 13,070-1x375;9x415-17,180/-p.m. |
| Assistant Lecturer (On Contract) | Rs. 12,050/-p.m. fixed |
| Tutor (On Contract)/ Instructor (On Contract) | Rs. 10,250/-p.m. fixed |
| Visiting Lecturer | Rs. 500/- per hour |
| Visiting Instructor | Rs. 250/- per hour |

In addition to the above salary, an academic allowance of 30% of the salary and other allowances approved by the University Grants Commission will also be paid to the posts of Senor Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary).

**Statutory benefits for permanent staff**

i. Sabbatical leave entitlement for the holder of the post of Senior Lecturer Grade I /II.
ii. Gratuity Payments.
iii. Membership in Universities Provident fund and Pension Scheme in the University System.
iv. Employees Trust fund benefits
v. Free Medical Services

**Benefits to the staff appointed on Contract**

i. Membership in Universities Provident fund in the University System.
ii. Employees Trust fund benefits.

Closing date of applications for the permanent posts of Senior Lecturer Grade I, Serion Lecturer II and Lecturer (Probationary) will be on 17.01.2005 and other posts will be on 10.01.2005

Application forms and other details may be obtained form the office of the Assistant Registrar / Establishnents, University of Jaffna, SriLanka, either in person or by sending a money order for Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order / Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna" together with a self - addressed stamped envelop 23x30 cm. in size.

Those who wish to apply for more than one post should apply in separate forms for each post/field.

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**Registrar,**
**University of Jaffna,**
**Sri Lanka.**
**2004.12.21.** (C/39992) (24)



உ

சாமியே சரணம் ஐயப்பா

# வியாவில் ஐயனார் கோவில் காரைநகர்

ஐயப்பன் அடியார்களே!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் 25.12.2004 சனிக்கிழமை காலை 9 மணிமுதல் ஐயப்பனுக்கு மகரஜோதி பெருவிழா சாஸ்தா பீடம் பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள் தலைமையில் நடத்தத் திருவருள் கூடியுள்ளது.

அகில இலங்கை யாழ்.மாவட்ட 18 ஆம் படி குருசாமி கலந்துகொள்ளும் இவ்விழாவில் ஏனைய குருசாமிமார்கள், மாலை அணிந்த சாமிமார்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து ஐயப்பன் அருள்பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விசேட நிகழ்ச்சியாக:

தமிழகத்தில் இருந்து வருகைதந்துள்ள உலகத் தவில் மேதை கலைமாமணி திருப்புன்கூர் T.G. முத்துக்குமாரசாமி, இடும்பாவனம் S.கண்ணன் அவர்களும் நாதஸ்வர மேதை கோவிலூர் A.குமார், கோவிலூர் E.பாபு குழுவினர்களின் விசேட இசைக்கச்சேரியும் நடைபெறும்.

அடியார்கள் அனைவரையும் மகேஸ்வர பூசையில் பங்குபற்றுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

வியாவில், காரைநகர் (40029) (29-43-1315) -ஆலய பரிபாலகர்கள்.

பிரசுர அன்பளிப்பு: காரை மணிகண்டன்


## 6ஆம் மாத நினைவு நாள் நிகழ்வு அழைப்பு

அமரர் **திரு.சச்சிதானந்தசிவம் ஞானசீலன**

(B.Com)

அன்னாரின் 6 ஆம் மாத நினைவு நாள் நிகழ்வு 25.12.2004 சனிக்கிழமை மு.ப.9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால், அதில் நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல.853, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.
- நண்பர்கள்.
(ச-40013) (43-1315)

## கண்ணீர அஞ்சலி

22.12.2004 அன்று அகால மரணமடைந்த எமது நண்பன்

**சீவரட்ணம் லவன்**



அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதோடு, ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பா! லவன் எம்மை விட்டு நீ
பிரிந்தாலும்
எம் இதயத்தின் நினைவுகளில் இருந்து
ஒருபோதும் நீங்கமாட்டாய்.

சுதுமலை வாழ் நண்பர்கள்.
(40032) (43-13-15)

# மரண அறிவித்தல்கள்

## சதாசிவம் சண்முகம்

காரைநகர், களபூமி, கரப்பிட்டியந்தனையைப் பிறப்பிடமாகவும் விளானையை வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் சண்முகம் அவர்கள் (22.12.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சதாசிவம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும் கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் சுந்தரம்மாவின் அன்புக் கணவரும் சத்தியதேவி, ரங்கநாதன், காலஞ்சென்ற இராசேந்திரன் மற்றும் இராஜேஸ்வரி, மகேந்திரன், மகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தம்பிப்பிள்ளை, தவமணிதேவி, மகாலிங்கம் (லண்டன்), தங்கவேலு (லண்டன்), உமாதேவி ஆகியோரின் அன்பு மாமானரும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் பேரம்பலம், சின்னம்மா, செல்லம்மா, பாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பொன்னம்பலத்தின் (இளைப்பாறிய எழுதுவினைஞர்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.12.2004) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர், களபூமி தில்லைமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விளானை,*
*காரைநகர்.*
(40040)(43-13-15)
தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

## திருமதி அம்பலவாணர் நாகம்மா



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் இணுவிலில் தற்போது வசித்தவருமாகிய திருமதி அம்பலவாணர் நாகம்மா அவர்கள் நேற்று (23.12.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்று, பூதவுடல் பி.ப.5 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேம்போலை ஒழுங்கை,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.*
(40039)(43-13-15)
தகவல்:
க.புவனேந்திரன்
(பேறாமகன்).

## திருமதி கனகரட்ணம் தங்கம்மா

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரட்ணம் தங்கம்மா நேற்று (23.12.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணத்தின் மனைவியும் பரமேஸ்வரி, சபாரட்ணம் (சாவ.இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் கந்தசாமி, செல்வவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் மலர்விழி (சுவிஸர்லாந்து), மலர்மதி (சுவிஸர்லாந்து), முகுந்தன் (பிரான்ஸ்), அரவிந்தன், வனுஜா, சர்மிலன், நேருஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2004) வெள்ளிக்கிழமை 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அரசடி,*
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.*
(40043)(43-13-15)
தகவல்:
க.சபாரட்ணம்,
க.பரமேஸ்வரி
(பிள்ளைகள்),

## மாகாண பொது...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்.நகுலாம்பிகை (மாவிட்டபுரம் தெற்கு), ஏ.சுபேசன் (வட்டுக்கோட்டை தெற்கு).

எஸ்.ஜெயக்குமார் (சுழிபுரம் கிழக்கு), எஸ்.சசிகலா (சுழிபுரம்), எஸ்.விஜயகௌரி (பணிப்புலம்), என்,சுதேஸ்குமார் (சங்கானை), எஸ்.சிவகுமார் (சித்தன்கேணி), என்.இன்பமலர் (தொல்புரம் மத்தி), பி.இராஜேஸ்வரி (முரசுமோட்டை), பி.மோகன் (மூளாய்), ரி.தேவசுதர்சினி (சங்கரத்தை), எம்.நந்தினி (சங்கரத்தை), என்.ரொசாந்தி (வட்டுக்கோட்டை), கே.பிரியதர்சினி (சுழிபுரம்), எஸ்.கேசவன் (சங்கரத்தை), எஸ்.ஐங்கரன் (சித்தன்கேணி), ஏ.சுகந்தினி (சித்தன் கேணி), எக்ஸ். அனித்தா சுகாசினி (ஊர்காவறுறை), கே.சிவப்பிரியா (ஊர்காவற்றுறை), ரி.பவான் (ஊர்காவற்றுறை), ஆர்.அஸ்ரன் (ஊர்கா வற்றுறை).

எம்.சாந்தினிதேவி (காரைநகர் மத்தி), வி.கிருஷ்ணவேணி (காரைநகர்), பி.அற்புதமலர் (காரைநகர்), ரி.ஜெயரூபன் (காரைநகர்), ஜே.சிவமலர் (காரைநகர்), ய.குகனேஸ்வரி (காரைநகர்), எஸ்.வாகீஸன் (காரைநகர்), எஸ்.தவராஜா (காரைநகர்), கே.தவகுமாரன் (காரைநகர்), பி.சோமசுந்தரம் (காரைநகர்), ஆர்.சிவாஜினி (காரைநகர்), ஜி.சிவகுமார் (காரைநகர்), ரி.புலேந்திரகுமார் (காரைநகர்), ஏ.இந்திரகுமார் (காரைநகர்).

(எ-ப-75-185-203)


BARATHY
சித்தன்கேணி

SPOKEN ENGLISH
with Grammar
*Lectured By:-*
NISHANTHAN
(Dip. in English)
புதிய பிரிவு ஆரம்பம்
25-12-2004
சனி 5.00 p.m. அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு:-
பிரிவு I, பிரிவு II, பிரிவு III வழமையான நேரப்படி நடைபெறுகின்றன. (39987)

பொருளியற் கல்லூரி

பெருமாள் கோயில் அருகில், நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம். கே.கே.எஸ். றோட், இணுவில்.

SPOKEN ENGLISH
with Grammar
*Lectured By:-*
NISHANTHAN
(Dip. in English)

புதிய பிரிவு ஆரம்பம்
(ப.நே.)
யாழ்நகரில்: 26-12-2004
ஞாயிறு 4.00 p.m.
இணுவிலில்: 25-12-2004
சனி 3.00 p.m.

குறிப்பு:-
பிரிவு I, பிரிவு II, பிரிவு III வழமையான நேரப்படி நடைபெறுகின்றன. (39988)

ராஜா யாழ்ப்பாணம்
அர்ஜுன் ரீமாசென் வடிவேல் தேவயானி பிரகாஷ்ராஜ் நடித்த
கிரி
இயக்கம் சுந்தர் C
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
விக்ரம், கிரன் நடித்த
ஜெமினி
காட்சி நேரம்: 10.30, 2.30, மட்டும் (பு.நே.)
தினசரி இரவு: 6.30 9.00 (பு.நே.)
ஆங்கிலப்படம் URASSIC PARK 3 அடுத்த வெளியீடு
மம்முட்டி நடித்த விஷ்வதுளசி
(சி-39821)

நிறைஞ்சனாஸ் சங்கானை
தனுஷ் பியா நடித்த
ட்றீம்ஸ்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45
THE MUMMY RETURNS

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக அர்ஜுன் (இருவேடம்) சாயாசிங் லைலா வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா
தினசரி 11.00. 3.00. 7.00. 10.00 (பு.நே.)
முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின்ற் காடின், 326,K.K.S.றோட், யாழ்ப்பாணம். (C/39634)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
*திருமதி மைதிலி சிறிஸ்கந்தசேகரம்*
அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தப்பு வல்லிபுரம்**

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

அவர்களின் (22.12.2004) திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/40011)
(43-13-15)
ஆசிரியர், ஊழியர் நலன்புரிச்சங்கம்,
யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி.

# மரண அறிவித்தல்கள்

## சீவரட்ணம் லவன்



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் உயரப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரட்ணம் லவன் 22.12.200[illegible] புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சீவரட்ணம் - ஈஸ்வரிதேவி தம்பதிகளின் ஏக புதல்வனும் இராகுலா, தர்சிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகநாதன், கிருஷ்ணானந்தன், செல்வராசா ஆகியோரின் மருமகனும் பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2004) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*கொக்குவில்.*
(40026)(43-13-15)
தகவல்:
வை.ஜெகநாதன் (மாமா).

## திருமதி தம்பையா அருந்ததி அம்மா

உடுப்பிட்டி வடக்கு, கொம்மந்தறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பையா அருந்ததி அம்மா (21.12.2004) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிவப்பிரகாசம் தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற ஆசிரியர் ஆழ்வாப்பிள்ளை தம்பையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரஞ்சிதமலர் மற்றும் மனோரஞ்சிதம், வனிதாமலர், இரஞ்சிதம் (ஆசிரியை, யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்), இரஞ்சிதராணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற விக்னராசா, தவராசா, கோபாலகிருஷ்ணன், டாக்டர் பகவான் நித்தியானந்தன் (மட்டுவில் தெற்கு), புஸ்பராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் திலீபன், கேசவன், தீபா, கேமா, றோஜனா, அனுசியா, சோபிகா, மிருணிகா, துங்கீசன், பியானா, பிரியங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கஜலோனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.12.2004) புதன்கிழமை அன்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொம்மந்தறை,*
*உடுப்பிட்டி வடக்கு,*
*உடுப்பிட்டி.*
(40036)(43-13-15)
தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## திருமதி சிவராசா தங்கம்மா



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவராசா தங்கம்மா அவர்கள் நேற்றுமுன்தினம் (22.12.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் சிவராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவகுரு - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - செல்லாச்சி தம்பதிகளின் மருமகளும் சகுந்தலாதேவி (கனடா), சந்திராதேவி (கனடா), இந்திராதேவி (கனடா), தவநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற துரைராசா (பரமு) மற்றும் வேலாயுதபிள்ளை (கனடா), செல்வரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பத்மலோஜினி - தருமலிங்கம், சிவலோஜினி - தியாகராஜா, பரந்திலகா - காந்தன், அருட்செல்வம் - மகிழினி, திருட்செல்வம், தவச்செல்வி - பவளேந்திரன், சுரேந்திரன் - நந்தினி (பாப்பா), சுகந்தினி - சுரேந்திரன், சுந்தரேசன் - நந்தினி, காலஞ்சென்ற சுதர்சன் மற்றும் சிவனேசன் - சுரேகா, சிவரூபன் - சாமினி, சிவகரன் - மேனகா, தாரணி - ரகுபாலன் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2004) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*G.P.S. றோட்,*
*கல்வியங்காடு.*
(40034)(43-13-15)
தகவல்:
குடும்பத்தினர்.

# ரயில் மோதி யானை பலி!

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் மோதியதில் யானை ஒன்று அந்த இடத்திலேயே உயிரிழந்தது. வேறு இரு யானைகள் படுகாயமடைந்தன. நேற்றுக் காலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்கமுவ பிரதேசத்துக்கு அப்பால் மீஓயாப் பகுதியில் ரயில் பாதையைக் கடந்து கொண்டிருந்த மூன்று யானைகளை ரயில் ஒரே நேரத்தில் மோதியது. அந்த இடத்திலேயே ஒரு யானை உயிரிழந்தது. மற்றைய இரு யானைகளும் படுகாயமடைந்தன. அந்த இரு யானைகளும் முள்ளந்தண்டில் காயமடைந்துள்ளதால் நகர முடியாத நிலையில் சரிந்து கிடக்கின்றன. அவையும் உயிர் தப்புவது சிரமமே என்று தெரிவிக்கப்படுகின்றது.

யானைகளை மோதிய ரயில் பாதையை விட்டு விலகியது. எனினும், ரயில்பெட்டிகள் சரியவில்லை. இதனால், சேதங்கள் தவிர்க்கப்பட்டன. இந்த விபத்துக் காரணமாக அந்தப் பாதையூடான ரயில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. (க-4-12)

# கிளிநொச்சியில் மழை நீரை சேகரிக்கப் புதிய திட்டம்!

வன்னிப் பெருநிலப்பரப்பில் மழை நீரைச் சேகரித்துச் சுத்திகரிப்புச் செய்து குடிதண்ணீராக மாற்றுவதற்கு இலங்கை மழைநீர் சேகரிப்பு இணையம் புதிய திட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

முதற்கட்டமாக மேற்படி இணையத்தின் செலவில் கிளிநொச்சியில் பன்னிரண்டு இடங்களில் பாரிய நீர்த்தாங்கி கொள்கலன்களை அமைத்து மழை நீர் சேகரிக்கப்படவிருக்கிறது.

இலங்கை மழைநீர் சேகரிப்பு இணையத்தினால் நேற்றுக்காலை கிளிநொச்சியில் இது தொடர்பாக கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையமண்டபத்தில் இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக இலங்கை மழைநீர் சேகரிப்பு இணையத்தின் பணிப்பாளர் றஞ்சு ஆரியரட்ண, அதன் இணைப்பாளர் சிறித் சிநோமத், மொழிபெயர்ப்பாளர் க.சொக்கநாதன் ஆகியோர் கொழும்பிலிருந்து வருகைதந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம், மேலதிக அரச அதிபர் வேதநாயகம், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள், உதவி அரச அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தக் கருத்தரங்கில் உரையாற்றிய கிளிநெரச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், 2025 ஆம் ஆண்டளவில் வன்னியில் நீர்த் தட்டுப்பாடு பெருமளவில் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. குடிதண்ணீருக்காகவும் உணவுக்காகவும் போராட்டம் நடத்தவேண்டிய நிலைகூட ஏற்படலாம். இந்த நிலையில் தற்போது ஆரம்பிக்கப்படவிருக்கும் மழைநீர் சுத்திகரிப்புத் திட்டம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நீர்த்தட்டுப்பாட்டை ஈடுசெய்வதற்கு மிகவும் உதவும் - என்றார். (4-7-352)

## போராளிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னைட் குப்பிகளை அணிந்திருந்தனர் என்றும் ரவைகளை வைத்திருந்தனர் என்றும் இராணுவத்தினர் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட புலிப்போராளிகள் இருவரும் முகாமாலைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-4)

## மனிதச் சங்கிலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அனைவரையும் அணிதிரண்டுவந்து இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் பங்கேற்குமாறு ஏற்பட்டாளர்கள் கேட்டிருக்கின்றனர். இத்தகைய மனிதச் சங்கிலிப் போராட்டங்கள் கடந்த திங்களன்று சாவகச்சேரியிலும் புதன்கிழமை கைதடியிலும் நடைபெற்றிருந்தமை தெரிந்ததே. (4)

# யுத்தத்தை நோக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்குப் புலிகள் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

பலாலி இராணுவ முகாம் பகுதிகளில் வாழ்பவர்களை அங்கிருந்து மெல்ல மெல்ல அகன்று விடுமாறும் அறிவுறுத்தியுள்ளனர்.

ஒரு நேரத்துக்கு ஒரு கதை சொல்லும் ஜனாதிபதியின் பேச்சை நாட்டு மக்களும் நம்ப மறுக்கின்றனர். அவரையும், அவரது அரசையும் விமர்சிக்கும் ஐ.தே.கட்சி எம்.பிக்களைத் துவம்சம் செய்யும் நடவடிக்கைகளில் மட்டுமே அவர் கவனம் செலுத்தி வருகிறார். தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது என்பதால் அவர் எதிர்க்கட்சியினர்மீது பழியைச் சுமத்தித் தப்பித்துக்கொள்ள முற்படுகிறார்.

ஹிட்லருக்கு இருந்த ஒரு கோயபலஸ் போல விமல் வீரவன்ஸ ஜனாதிபதியுடன் செயற்பட்டு வருகிறார். அண்மையில் 40 ஆயிரம் பட்டதாரிகளைக் கொழும்புக்கு வரவழைத்து அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதாக பொய் வாக்குறுதிகளை அளித்தார் ஜனாதிபதி. விமல் வீரவன்ஸ அவர்களைக் கைதட்டச் சொன்னார்.

எனக்குத் தொழில் தருகிறார் எனக் கூறினாலும், நானும் கைதட்டத்தான் செய்வேன். இதில் என்ன வேடிக்கையென்றால் பட்டதாரிகள் தாங்கள் கைதட்டுவதை நிறுத்தியபோதும் விமல் வீரவன்ஸ கைதட்டுவதை நிறுத்தவில்லை. ஜனாதிபதிக்காக மிகவும் தாளமிடுபவராக விமல் காணப்படுகிறார்.

எஸ்.பி. திஸநாயக்கவை விடுவிக்கக்கோரி நாம் நடத்திய பொதுக்கூட்டத்துக்கு 1,500 பேர் மட்டுமே வந்தார்கள் என தேசிய தொலைக்காட்சியில் பகிரங்கமாகச் சொல்லும் அளவுக்கு இந்த நாட்டின் மகா பொய்யராகிவிட்டார் விமல்.

ஜே.வி.பி. அமைப்புக்குள், கதைகளை திரித்துக்கூறி உண்மையைப் பொய்யாக்குவதில் முதல் மனிதனாக இருக்கிறார் விமல்.

அரச தொலைக்காட்சியில் எமது பொதுக்கூட்டத்துக்குக் கொண்டுவரப்பட்ட நாய்கள் மட்டுமே காண்பிக்கப்பட்டன. வெகுவிரைவில் அரச ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளில் இறங்குவோம்.

அரசின் அடிவருடிகளாக இந்த ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன. 70ஆம் ஆண்டுக்குப் பின்னர் இப்படியொரு சனத்திரள் ஹைட்பார்க் மைதானத்தில் திரளவில்லை. அதை மறைக்க முயல்கின்றார்கள்.

விமல் வீரவன்ஸ சிவப்புச்சட்டை உடுத்திய இடதுசாரியல்ல். அவர் சர்வாதிகார சிந்தனை படைத்தவர். மக்களை ஒவ்வொருநாளும் ஏமாற்ற முடியாது. ஒருசில மாதங்களில் இந்தக் கொடுங் கோல் ஆட்சிக்கு முடிவுகட்டுவோம் - என அவர் மேலும் கூறினார். (க-4)

## அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் 28 ஆம் திகதி பளைப் பிரதேசத்திலும் 29 ஆம் திகதி கண்டாவளைப் பிரதேசத்திலும் 30 ஆம் திகதி பூநகரிப் பிரதேசத்திலும் கண்டனப் பேரணிகள் நடத்தப்படவிருக்கின்றன.

31ஆம் திகதி மாவட்ட மக்கள் ஒன்றிணைந்து கிளிநொச்சியில் மாபெரும் கண்டனப் பேரணியை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இதன்போது ஜனாதிபதி, சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன.

கடந்த சில நாள்களாக யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை போன்ற மாவட்டங்களிலும் இத்தகைய மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றமை தெரிந்ததே. (4-12)

## புதிய ஆளுநர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச அதிகாரிகளைச் சந்திப்பார். விளையாட்டுத் துறையுடன் தொடர்புடைய அலுவலர்களையும் ஆளுநர் சந்திப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன அண்மையில் குடாநாட்டுக்கு விஜயம்மேற்கொள்ளத் திட்டமிட்டு பொதுஅமைப்புகளின் எதிர்ப்புக் காரணமாக விஜயத்தைக் கைவிட்டதும் -

பின்னர் அவர் ரகசியமாக யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்பியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 'யுனிசெவ்' நிறுவன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டனர்.

இராணுவத்தினரால் இருப்பிடங்களை இழந்த ஏராளமான மக்கள், நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கின்றனர். அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அந்த மக்கள் - குறிப்பாக சிறுவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் எனவும் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு யுத்தத்தினாலும் வெள்ள அனர்த்தங்களினாலும் பாதிக்கப்பட்டிருகின்ற சிறுவர்களின் நிலை தொடர்பாக மேற்படி சந்திப்பில் தீவிரமாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், அடுத்த வருடம் வன்னியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் 'யுனிசெவ்' பிரதிநிதிகளுக்கு விளக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வனுடன் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா ஆகியோரும் உடனிருந்தனர். (4)

# கிணற்றில் வீழ்ந்து சிறுமி மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ.24

கிணற்றில் வீழ்ந்து இறந்தார் என்று கூறப்படும் சிறுமி ஒருவரின் சடலம் நேற்றிரவு ஊர்காவற்றுறைப் பொலீஸாரினால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நித்தியகுமார் நாகதர்சனா (வயது -7) என்ற சிறுமியின் சடலமே ஒப்படைக்கப்பட்டது.

சடலம் பிரேதப் பரிசோதனையின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (4-12)

## இடுப்புப்பட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை சிக்கலடைந்தது.

விடயத்தில் தலையிட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் பெண் போராளிகள் இடுப்புப்பட்டியுடன் செல்ல அனுமதி உண்டு எனக் கூறி அவர்களைத் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்குமாறு இராணுவத்தினரிடம் கேட்டனர்.

இதனை மறுத்த படையினர் பட்டிகளை கழற்றியப் பைகளில் வைத்துச் செல்லுமாறு தெரிவித்தனர். இதனையடுத்து நேற்றைய பயணம் ரத்துச்செய்யப்பட்டது. (க-4)

## இந்திய முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டார்.

நரசிம்மராவ் பிரதமராக இருந்த காலத்தில் தற்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நிதியமைச்சராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற் றிய இவரின் மறைவுக்கு அனைத்து இந்தி யத் தலைவர்களும் தமது அனுதாபத்தைத் தெரி வித்துள்ளனர். நேரு- காந்தி குடும்பத்திற்கு வெளியே இந்தியாவின் பிரதமராக இருந்து 5 வருட ஆட்சியை எந்தத்தடையும் இன்றி நடத்தி முடித்த முதலாவது அரசியல்வாதி என்ற பெருமையும் அவருக்கு உண்டு.

இவரின் ஆட்சிக்காலத்திலேயே 1992 இல் அயோத்தியில் பாபர் மசூதி இடிப்பு சம்பவம் இடம்பெற்றது. அதையடுத்து இடம்பெற்ற கலவரங்களில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-4)


## நியூ றோயல்

சங்கத்தானை

புவியியல்

A/L 2006

A/L 2005

மீட்டல்

By: K.கிரிதரன்

(40023)

## நியூ றோயல் அக்கடமி

சங்கத்தானை O/L எடுத்த மாணவர்க்கும் G.A.Q. மாணவர்க்குமான SPOKEN ENGLISH WITH GRAMMAR BY: Mr.BRITTO

ஆரம்பம்: 06.01.2005 வியாழன் 5 p.m.

-இயக்குநர்.

(40014)

## A/L 2007 கலைப்பிரிவு

மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி! வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி முன்னணி ஆசிரியர்களின் சேவை விரைவில் யாழ்நகரில்

விவரங்களுக்கு: D.C.A.

மக்கள் வங்கி அருகில் ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(40024)

## SUBRA (14) சித்தன்கேணி

2007 A/L

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்

05.01.2005

புதன் மாலை 4.00 மணி

(சி-39879)


# மரண அறிவித்தல்

## திருமதி ஜெகநாதன் முத்தீஸ்வரி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகநாதன் முத்தீஸ்வரி அவர்கள் நேற்று (23.12.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2004) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நந்தினி பேக்கரி அருகில்,*
*அரசடி றோட், கொக்குவில் மேற்கு.* (40047)(29-15-13)

தகவல்: மகன்.

# மரண அறிவித்தல்கள்

## தம்பு செல்லையா



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பழம் றோட், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு செல்லையா நேற்று (23.12.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு கனகம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் தங்கம்மாவின் சகோதரனும் றீற்றா, பூபாலசிங்கம், யோகரத்தினம் புனிதம், புஸ்பதேவி ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்ற மோசெஸ் நாகரத்தினம், விநாயகமூர்த்தி, செல்லையா நேசராசா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2004) வெள்ளிக்கிழமை பி.ப. 3 (ப.நே.) மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*75, பழம் றோட், ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.* (சி-40014)(29-13-15)

தகவல்: இன்பமலர், ஜீவமலர்.

## திருமதி கிருஷ்ணபிள்ளை தெய்வானை

புலோப்பளை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணபிள்ளை தெய்வானை அவர்கள் நேற்று (23.12.2004) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும் சின்னாச்சியின் அன்புச் சகோதரியும் பரமேஸ்வரி, தெய்வேந்திரம், விஜயரட்ணம், பூமணி, சந்திரகுமார், உதயகுமார் (அதிபர், சோரன்பற்று கணேசா மகாவித்தியாலயம்), ரூபசுகந்தினி (ஆசிரியை, பளை மத்திய கல்லூரி), பவானி ஆகியோரின் பாசமிகு பெரிய தாயாரும் வளர்ப்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2004) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகப் புலோப்பளை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சாவகச்சேரி.* (சி-40016)(29-15-13)

தகவல்: K. உதயகுமார் (அதிபர்).






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.